1415

NEW METHOD TAMIL READER

1415 1229

FOR STANDARD IV

[Prepared according to the Elementary School Syllabus 1939]

BY

PANDIT N. KANAKARAJA IYER, B.O.L.

1819

T.G. GOPAUL PILLAI

TEPPAKULAM: TRICHINOPOLY.

PRICE As. 6

புதுமுறைத் தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பிற்குரியது

[1939-ல் வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளின் பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1939
MADRAS

ஆசிரியர் :
பண்டித, N. கனகராஜையர், B. O. L.,
தமிழாசிரியர், மஹாராஜா கலாசாலை, புதுக்கோட்டை.

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1939 [விலை அணா 6

First Edition 1939.

முகவுரை

இளங்குழந்தைகள் கற்கும் கல்விமுறை புதுமை பெற வேண்டும் என்னும் கருத்தால், சென்னை அரசாங்கத்தார் 1939-ல் வெளியிட்ட புதிய பாடதிட்டத்தை யொட்டி, இவ் வாசக வரிசைகள் இயன்றுள்ளன. ஒவ்வொரு பாடத்திலும் புதுமுறை புகுத்தப் பெற்றிருத்தல், அவ்வப் பாடத்தின் பின் உள்ள பயிற்சிகளால் நன்கு விளங்கும்.

கதைப்புத்தகங்களைத் தாமே படித்துப் பழகவும், பத்திரிகைகளைப் படித்துப் பொருள் அறியவும், இலக்கண அறிவைப் பெறவும் சிறுவர்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட வேண்டும் எனச் சென்னை அரசாங்கத்தார் கருதுவதால், அம்முறைக்கு ஏற்ற பாடங்களும் இவ்வாசகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. நீதிகளை விளக்கும் பாட்டுக்களும், குழந்தைகள்மனத்தைக் கவரத்தக்க இசைப்பாட்டுக்களும், நாடகமுறையில் இயன்ற பாடங்களும் போதிய அளவு இவ் வாசகங்களில் சேர்க்கப்பெற்றுள்ளன. இங்ஙனம் இயன்றுள்ள இப் புதுமுறைத் தமிழ் வாசகங்கள் நம் நாட்டுச் சிறுவர்களுக்கு நலந்தந்து தமிழகத்தே பரவி வளர்வனவாகுக.

கல்வி அதிகாரிகளும், கல்விச்சாலை ஆசிரியர்களும், கல்வியபிமானிகளும் இவ்வாசக வரிசைகள் அமைந்துள்ள இப்புத்தகங்களைத் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து ஆதரித்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்:

N. கனகராஜையர், B. O. L.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	நமது நாடு	....	1
2.	வழிப்போக்கனும் ஆலம்பழமும்	....	4
3.	வரப்புயர	....	8
4.	அசோகர்	....	11
5.	வேஷக்காரனை மோசக்காரன் ஏமாற்றியது	....	15
6.	நாட்டுப்பாட்டு	....	20
7.	மதன் மோகன் மாளவியா	....	23
8.	கைத்தொழிற் பொருட்காட்சி	,...	27
9.	இசையின் இன்பம்	....	33
10.	வீடுகட்டுதல்	....	38
11.	இன்சொல்	....	43
12.	காகிதம்	....	46
13.	ராஜாராம் மோகன்ராய்	....	51
14.	ஆமையும் முயலும்	....	5
15.	காற்று	....	59
16.	இரந்திதேவர்	....	63
17.	கூட்டுறவு	....	67
18.	ஈஸ்வர சந்திர வித்தியாசாகரரும் வேலைக்காரனும்	....	71
19.	நார்த்தொழில்	....	75
20.	முரசு	....	80

எண்	பொருள்		பக்கம்
21.	பண்டைத் தமிழர் வியாபாரம்	....	82
22.	முதலை	....	86
23.	துஷ்டன் அடைந்த பலன்	....	91
24.	தேசத்தொண்டர்	....	93
25.	அரிச்சந்திரன்	....	97
26.	பாரி	....	102
27.	நோயற்றவாழ்வு	....	107
28.	வெற்றிவேற்கை	....	112

புதுமுறைத் தமிழ் வாசகம்

(நான்காம் வகுப்பிற்குரியது)

1. நமது நாடு

இந்தியா என்பது நமது நாடு. அது பல சிறு நாடுகள் கொண்டது. முன்னாளில் ஐம்பத்தாறு தேசங்கள் நம் நாட்டில் இருந்தன. நமது தேசத்தின் வடக்கில் இமயமலையும், தெற்கே இந்தியப் பெருங்கடலும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும், மலையும் எல்லைகளாக இருக்கின்றன.

ஒரு நாட்டுக்கு நீர்அரண், மலையரண் முதலிய காவல்கள் வேண்டும். நமது நாட்டுக்கு இந்த அரண்கள் இயற்கையிலேயே அமைந்துள்ளன. உலகத்திலுள்ள மலைகளிற் பெரியதாகிய இமயமலையைக் கடந்து எவரும் நம் நாட்டுக்குள் நுழைய முடியாது. மேற்கு ஓரத்திலும், கிழக்கு ஓரத்திலுமுள்ள சிறு வழிகள் இமய மலையைக் கடந்துவர உதவுகின்றன.

நாம் இந்தியாவின் தென்பாகத்தில் இருக்கிறோம். நாம் வசிக்கும் பாகத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர். நாம் பேசும் மொழி தமிழ்மொழியாகும். மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு முதலிய மொழிகளைப் பேசும் ஜனங்களும் தென்னாட்டில் உள்ளனர். வட

நாட்டில் இந்தி, வங்காளி, சிந்தி, பஞ்சாபி, குஜராத்தி முதலிய பல பாஷைகள் வழங்குகின்றன.

இக் காலத்தில் நம் நாடு இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. ஒரு பிரிவு சுதேச சமஸ்தானங்களின் கூட்டம்; மற்றொரு பிரிவு பிரிட்டிஷ் இந்தியா.

பிரிட்டிஷ் இந்தியாவில் சென்னை, வங்காளம், பம்பாய், பஞ்சாப், ஐக்கியமாகாணங்கள், மத்தியமாகாணங்கள் முதலிய பல மாகாணங்கள் இருக்கின்றன. ஐதராபாத், மைசூர், திருவாங்கூர், காஷ்மீரம், பரோடா முதலிய பல சுதேச சமஸ்தானங்கள் இந்தியாவிலுள்ளன.

இந்த இரண்டு பிரிவுகளும் அடங்கிய நம் நாட்டை நமது சக்கரவர்த்தி ஆண்டு வருகிறார். அவருக்குப் பிரதிநிதியாக 'வைசிராய்' என்ற பெரிய ஆங்கிலேய அதிகாரி டில்லி மாநகரில் இருக்கிறார். மாகாணங்களின் தலைவர்களுக்கு 'கவர்னர்கள்' என்று பெயர்.

இந்நாளில் ஒவ்வொரு மாகாணமும் தனது நன்மையைத் தகுந்த வழிகளில் வளர்த்துக்கொள்ள உரிமை அடைந்துள்ளது. ஒவ்வொரு மாகாணமும் அதனதன் சட்டசபைகளில் கூடி, இந்தியாவிலுள்ள முப்பத்தாறுகோடி மக்களும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ளத் தக்க நற்காலம் ஏற்பட்டிருக்கிறது.

இந்திய மக்கள் பல்வேறு இனமாகப் பிரிந்துள்ளனர். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், ஜொராஷ்டிரம், சீக்கியம் முதலிய மதங்கள் நம் தேசத்தில் இருக்கின்றன. நமது தேசத்தில் பற்பல பாஷைகள் வளர்ந்து வருகின்றன. இந்திய மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்

கிப் பேசி, மனம் ஒத்து வாழ்வதற்கு இவை எல்லாம் இடையூறுகள்போலவே தோன்றும்.

மதங்கள் எத்தனை வகையாக இருந்தாலும், கடவுள் ஒருவர்தான் என்ற உண்மையை நாம் உணரவேண்டும். உணர்ந்தால்தான் நம்மிடமுள்ள வேறுபாடுகள் மறையும். ஒற்றுமைக்கு வழி உண்டாகும். அன்பினால் ஒருவரை ஒருவர் நம்பி வாழ்ந்தால், எவ்வகைத் தீங்கும் வராது. உலகத்தார் நமது பெருமையை அறிந்து புகழ்வர்.

துளு	வங்காளி	குஜராத்தி	சீக்கியம்
கோடி	உரிமை	கன்னடம்	கிறிஸ்தவம்
இந்து	தெலுங்கு	மலையாளம்	ஜோராஷ்டிரம்
இந்தி	மாநகர்	பிரதிநிதி	இயற்கையிலேயே
சிந்தி	இடையூறு	சட்டசபை	நெருங்கிப் பேசி
அரண்	வைசிராய்	மாகாணம்	சுதேச சமஸ்தானம்
இஸ்லாம்	இமயமலை	தமிழ்நாடு	பிரிட்டிஷ் இந்தியா
பஞ்சாபி	கவர்னர்	எல்லைகளாக	இந்தியப் பெருங்கடல்

அரும்பதவுரை: இடையூறு - தடை. சமஸ்தானம் - இராஜ்யம். மொழி - பாஷை, பேச்சு. பிரதிநிதி - பதில் அதிகாரி. மதம் - கொள்கை, கொழுப்பு. சுதேசம் - தாய் நாடு. (சுதேசம் × பரதேசம். ஒற்றுமை × வேற்றுமை. இயற்கை × செயற்கை.)

பயிற்சி

I. நாம் எழுதும்போது ஒரு சொல்லுக்கும், மற்றொரு சொல்லுக்கும் இடையில் சிறிது இடம் விடுகிறோம். ஒரு வாக்கியத்திற்கும், மற்றொரு வாக்கியத்திற்கும் இடையில் சிறிது இடம் விடுகிறோம். இம்மாதிரியே ஒவ்வொரு பாடமும், கருத்தின் தொடர்பை யொட்டிப் பல பிரிவுகளாக

வகுக்கப்படும். ஒரு பிரிவுக்கும், மற்றொரு பிரிவுக்கும் மத்தியில் சிறிது அதிகமான இடம் விடப்படும். இவ்விதப் பிரிவுகளுக்குப் **பாராக்கள்** என்று பெயர். ஒவ்வொரு பாராவிலும் பல வாக்கியங்கள் உண்டு.

II. இப்பாடத்தில் எத்தனை பாராக்கள் இருக்கின்றன? இரண்டாவது பாராவில் எத்தனை வாக்கியங்கள் உண்டு?

III. மாகாணம், சமஸ்தானம், மொழி, தேசம், இயற்கை, சுதேசம், ஒற்றுமை—இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க.

கேள்விகள்

1. இந்தியாவின் எல்லைகள் யாவை?
2. இந்தியாவின் இயற்கை அரண்கள் எவை?
3. சுதேச சமஸ்தானங்கள் சில கூறுக.
4. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மாகாணங்கள் சில கூறுக.
5. நம் நாட்டில் வழங்கும் பாஷைகளில் சிலவற்றைக் கூறுக.

---

2. வழிப்போக்கனும் ஆலம்பழமும்

ஒரு நாட்டுப்புறத்தான் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்கு நடந்து போனான். அந்த இரண்டு கிராமங்களுக்கும் இடையில் மிகவும் நன்றாய்ச் செப்பனிட்ட சாலையொன்று இருந்தது. அச்சாலையின் இருபுறமும் பெரிய ஆலமரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அவைகளின் கிளைகள், இலைகள் அடர்ந்து ஒன்றோடொன்று பின்னிக்கொண் டிருந்தமையால், அச்சாலை நெடுக ஒரு பந்தல் அமைத்ததுபோல நிழல் பரவியிருந்தது.

வழிப்போக்கன் நடந்து வந்தமையால், சிறிது களைப்பாற எண்ணி, அவ்வாலமரங்களில் ஒன்றின் அடியில் உட்கார்ந்தான். வெயிலுக்காக அம்மரத்தில் வந்து தங்கியிருந்த பறவைகள் இன்பமாய்ப் பாடிக் கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று வீசிற்று; வழிப் போக்கனுக்குத் தூக்கம் வந்தது. ஆகையால், அவன் தரையில் சிறிது நேரம் படுத்திருந்தான்.

அவன் படுத்து மேலே மரக்கிளைகளைப் பார்த்தான். “ஆஹா! இவை கண்ணுக்கு எவ்வளவு அழகாயிருக்கின்றன! ஒரே அளவான எண்ணிறந்த சிறிய பழங்கள் கண்ணுக்குத் தோன்றுவது எவ்வளவு அழகாய் இருக்கிறது! இவைகளைப் பற்பல பறவைகளுக்குக் கடவுள் உணவாய் அமைத்திருக்கிறார். கடவுளுடைய மகிமையே மகிமை! ஆயினும் அவர் இம்மரத்துக்கு ஒன்றுமட்டும் குறை வைத்திருக்கிறார். இந்த மரத்தைப் பார்த்தால் மிகப் பெரியதாய் இருக்கிறது. இதன் பழமோ, இலந்தைப் பழத்தைப்போல் மிகச் சிறியதாயிருக்கிறது. இவ்வளவு பெரிய மரத்தில் இவ்வளவு சிறிய பழத்தைக் கடவுள் அமைத்திருப்பது எத்துணை அறிவீனம். பனைமரம் எவ்வளவு சிறியது! உயரமாய் வளர்ந்திருப்பது தவிர, வேறு அதில் என்ன இருக்கிறது! ஒருவர் இருப்பதற்கும் அதில் நிழல் உண்டா! இல்லையே! அவ்வாறிருக்க அதன் பழம் எவ்வளவு பெரியது! பூசணி நிலத்தில் படரும் ஒரு கொடிதானே! அதன் பழம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது! இவைகளை உற்று நோக்கும்போது கடவுளுக்கு ஞானம் இல்லை என்பது தெரிகிறது. இந்த ஆலமரத்தில் பெரிய பழங்கள் தொங்கிக்கொண் டிருந்தால், அவை கடவுளின்

பேரறிவை விளக்கிக் காட்டுமல்லவா!" என்று தனக்குள் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அச்சமயத்தில் ஓர் ஆலம்பழம் திடீரென்று அவன் நெற்றியில் விழுந்தது. அதனால் அவனுக்குச்

சிறிது வலி உண்டாயிற்று. உடனே அவன் எழுந்து உட்கார்ந்துகொண்டு, அப்பழத்தைக் கையிலெடுத்தான். "இது சிறிய பழமாயிருந்ததினால் நான் உயிர் பிழைத்தேன்; நான் எண்ணியபடி பெரிதாயிருந்தால், இப்பழம் விழுந்தவுடன் இறந்திருப்பேன். ஆஹா! இப்பொழுதுதான் நான் கடவுளின் பேரறிவை உள்ளபடி அறிந்தேன்! எல்லாம் அறிந்தவரும், எல்லா வல்லமையும் உடையவருமாகிய அவரை இகழ்வது தகாது," என்று சொல்லிக் கடவுளைத் துதித்துக் கொண்டே எழுந்து சென்றான்.

ஓங்கி	உள்ளபடி	எண்ணிறந்த	ஒரே அளவான
நெடுக	அறிவீனம்	வழிப்போக்கன்	நாட்டுப் புறத்தான்
ஞானம்	திடீரென்று	சாலையொன்று	துதித்துக்கொண்டே
கடவுள்	களைப்பாற	இலந்தைப் பழம்	மகிமையே மகிமை
பந்தல்	பேரறிவை	பின்னிக்கொண்டு	உற்றுநோக்கும்போது
எத்துணை	செப்பனிட்ட	விளக்கிக்காட்டும்	அமைத்ததுபோல்

அரும்பதவுரை: மகிமை - பெருமை. துதித்து -வணங்கி. ஈனம் - குறைவு, இழிவு. எண்ணிறந்த - கணக்கில்லாத. சாலை - பாதை. (அறிவு+ஈனம்=அறிவீனம். எண்+இறந்த=எண்ணிறந்த. நாடு+புறம்=நாட்டுப்புறம்.)

பயிற்சி

I. அ, ஆ, ஒ, ஓ, ஐ, ஏ, ரு, ழு, ணு, றை இவ்வெழுத்துக்களின் உச்சரிப்பைக் கவனி. சில எழுத்துக்கள் குறுகிய ஓசையுடையவை. சில எழுத்துக்கள் நீண்ட ஓசையுடையவை. எந்தெந்த எழுத்துக்கள் குறுகிய ஓசையுடையவை; எவை யெவை நீண்ட ஓசையுடையவை என்று கவனித்துச் சொல்லு.

குறுகிய ஓசையுடைய எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் அல்லது குறில் என்று சொல்லப்படும். நீண்ட ஓசையுடைய எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் அல்லது நெடில் என்று சொல்லப்படும்.

உயிர் எழுத்துக்களில் எந்தெந்த எழுத்துக்கள் குறுகிய ஓசையுடையவை; எந்தெந்த எழுத்துக்கள் நீண்ட ஓசையுடையவை என்று கவனித்துச் சொல்லு.

II. (1) இப்பாடத்திலுள்ள படத்தை உற்றுநோக்கி அதைப்பற்றிச் சில வாக்கியங்கள் சொல்லு.

(2) கடவுள், ஞானம், நாட்டுப்புறம், திடீரென்று இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் அமைத்து ஒவ்வொரு வாக்கியம் கூறு.

கேள்விகள்

1. வழிப்போக்கன் முதலில் மரத்தைப் பார்த்ததும் என்ன சிந்தித்தான்?
2. ஆலம்பழம் தன் நெற்றியில் விழுந்தபின் என்ன தெரிந்துகொண்டான்?
3. வழிப்போக்கன் நடந்துசென்ற சாலை எவ்வாறு தோன்றிற்று?



3. 'வரப்புயர'

தமிழ்நாடு முற்காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்ருகப் பிரிந்திருந்தது. அவைகளை முறையே சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் சோழ அரசர்கள் ஒரு காலத்தில் மிகவும் மேன்மை பெற்றிருந்தார்கள்.

அச்சோழர்களில் குலோத்துங்கசோழன் என்பவன் மிகவும் சிறந்தவன். அவனுக்கு முடிசூட்டுவிழா மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. அதற்குப் பல புலவர்களும், அரசர்களும், பிரபுக்களும் வந்திருந்தார்கள். அங்கே வந்திருந்த புலவர்களெல்லாம் அரசனை வாழ்த்தினர்கள். அவர்கள் ஔவையாரை நோக்கி, "அம்மையாரே, நீர் அரசனை வாழ்த்த வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுது ஔவையார், 'வரப்புயர' என்பதை மாத்திரம் சொன்னார். அதன் கருத்தைக் கவனியாது, அவர்கள் வாழ்த்துக்கூறும்படி ஔவையாரை மீண்டும் வேண்ட, முன்போலவே அவர் 'வரப்புயர' என்றார். அதைக் கேட்ட புலவர்கள் மூன்றும் முறையும் அவரை வற்புறுத்தினர்கள். அம்முறையும் ஔவையார், 'வரப்புயர' என்பதையே சொன்னார்.

ஆகையால், அவர் கருத்தை அறியாத புலவர்கள் அவரை நோக்கி, "மும்முறையும் 'வரப்புயர' என்பதை மாத்திரம் சொன்னீர்கள். அதன் கருத்தை விளக்க வேண்டும்," என்றார்கள். அதற்கு ஔவையார், "நான் சோழ மன்னனை என் மனமார வாழ்த்தினேன். உங்களுக்கு அதன்பொருள் விளங்கவில்லை; சொல்லுகிறேன்; கேளுங்கள். 'வரப்புயர' என்றதால் வயல்களின் வரப்பு உயரவேண்டும் என்று வாழ்த்தினேன். இப்படி வரப்புயர்ந்தால், வயல்களில் நீர் உயரும்; நீர் உயர்ந்தால், நெல் உயரும்; நெல் உயர்ந்தால், குடி உயரும்; குடி உயர்ந்தால், கோல் உயரும்; கோல் உயர்ந்தால், கோன் உயர்வான். ஆகையால், அரசன் சிறப்

படைவதற்கு வரப்புயர்தலே காரணமாகும். அதனாலே தான் நான் 'வரப்புயர' என்றேன்," என்று கூறினர்.

அதைக் கேட்ட புலவர்களெல்லாம் ஔவையாரின் கூர்ந்த அறிவுக்காக, அவரை மிகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இக்கதையால் முற்காலத்தில் புலவர் முதலானவர் வேளாண்மையை எவ்வளவு மேன்மையாகக் கொண்டிருந்தனர் என்பதை உணரலாம்.

சேரர்	பாண்டியர்	சிறப்பாய்	கோல் உயரும்
சோழர்	மும்முறை	வரப்புயர	குடி உயரும்
கூர்ந்த	மீண்டும்	நடைபெற்றது	கோன் உயர்வான்
மனமார	வேளாண்மை	தமிழ்நாடு	முடிசூட்டுவிழா
மேன்மை	முறையே	மாத்திரம்	விளக்கவேண்டும்
கருத்து	ஔவையார்	முன்போல	முதலானவர்

அரும்பதவுரை: மீண்டும் - மறுபடியும். மனமார - முழு மனதுடன். கருத்து - எண்ணம். கோல் - அரசாட்சி. குடிகள் - ஜனங்கள். முடி - கிரீடம். முடிசூட்டுவிழா - பட்டங் கட்டும் திருநாள். கோன் - அரசன். (பிரபு × ஏழை.)

I. (1) ஒவ்வொரு உயிர்க்குறிலையும் முதலாக வைத்து ஒவ்வொரு வார்த்தை கூறு.

(2) ஒவ்வொரு உயிர்நெடிலையும் முதலாக வைத்து ஒவ்வொரு வார்த்தை கூறு.

(3) க, கா...............கௌ என்ற வரிசையில் குறுகிய ஓசை யுடையவை எவை எவை; நீண்ட ஓசையுடையவை எவை எவை கவனித்துச் சொல்லு.

(4) இம்மாதிரியே உயிர்மெய் யெழுத்துக்களில் உள்ள குற்றெழுத்துக்கள் எத்தனை; நெட்டெழுத்துக்கள் எத்தனை என்று எண்ணிச் சொல்லு.

(5) மேழி, ஆசை, ஐயா, ஒலி, ஔவை—இவ்வார்த்தைகளிலுள்ள உயிர்க் குற்றெழுத்துக்கள், உயிர் நெட்டெழுத்துக்கள், உயிர் மெய்க்குறில், உயிர் மெய்நெடில் எவை எவை ?

II. கருது, கருத்து, கவனி, கவனம், உயரும், உயரம், புகழ்ந்தார், புகழ்—இவை என்ன சொற்கள் ?

III. கூறு, விளக்கு, குடி, முடி, கோல்—இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு அர்த்தம் கூறுக.

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் மூன்று பிரிவுகள் யாவை ?
2. ஔவையார் குலோத்துங்கனை எவ்வாறு வாழ்த்தினர் ?
3. 'வரப்புயர' என்பதை ஔவையார் எவ்வாறு விளக்கினர் ?

---

4. அசோகர்

சுமார் இரண்டாயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியாவில் மகதம் என்ற பெயருள்ள ஒரு பெரிய நாடு இருந்தது. வடஇந்தியா முழுவதுமே ஒரு சமயம் அம் மகதநாட்டில் சேர்ந்திருந்தது. அதுவே சந்திரகுப்தன் மிக்க புகழுடன் ஆண்ட இராஜ்யம் ஆகும். சந்திரகுப்தனுக்குப் பின் மகத நாட்டை ஆண்டவர் அசோக சக்கரவர்த்தி ஆவார்.

அசோகர் மிகச் சிறந்த மன்னர்; அன்பு, தெய்வ பக்தி, அருள், தர்மம், ஒழுக்கம் முதலிய நற்குண நற்செய்கைகளை உடையவர்; பிறர் நன்மைக்காக உழைக்கும் பெருந்தன்மை வாய்ந்தவர்.

அவர் பட்டத்திற்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகளானபின், கலிங்கநாட்டின்மீது படை எடுத்துச் சென்று, கடும்போர் புரிந்தார். அச்சண்டையில் ஆயிரக் கணக்கான மக்கள் மாண்டார்கள். அநேகர் பஞ்சத்தாலும், பிணியாலும் இறந்தனர். இவைகளைக்



கண்ட அசோகர், மனம் வருந்தி "இனிமேல் போர் செய்வதே இல்லை," என்று உறுதி செய்துகொண்டார்; அது முதல் சிற்றரசர்களையும், குடிகளையும் தமது இனிய குணம் செயல்களால் வசப்படுத்தி ஆண்டு வந்தார்.

அசோகர் பௌத்த மதத்தை மேற்கொண்டு அதைப் பரவச்செய்தார். எனினும், அவர் பிற மதத்தினர்களுக்கு எவ்விதத் தீமையும் செய்யவில்லை. அசோகர் பௌத்த மதத்தைத் தழுவியபின், அவர் வாழ்க்கை

யில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அவர் உயிர்க் கொலையை முற்றிலும் வெறுத்தார்; மிருகங்களை வேட்டையாடுவதை ஒழித்தார்; குடிகளும் உயிர்க் கொலை செய்யக்கூடாதென்று சட்டஞ் செய்தார். அவர்தம் போதனைகளைக் கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் எழுதி வைக்க ஏற்பாடு செய்தார்.



அசோகர் காலத்தில் சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை வைத்துப்பயிராக்கவும், கிணறுகள் வெட்டிச் சத்திரங்கள் கட்டவும், வைத்தியசாலைகள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மிருக வைத்திய சாலைகளும் அவரால் ஏற்படுத்தப்பட்டன.

அவர் சைனு, ஜப்பான், பர்மா, இலங்கை முதலான நாடுகளுக்குப் பௌத்த சந்நியாசிகளை அனுப்பி, பௌத்தமதத்தைப் பரவச் செய்தார்.

பிணி	போதனை	கடும்போர்	சிற்றரசர்
சுமார்	மாறுதல்	வசப்படுத்தி	சத்திரங்கள்
ஆண்டு	ஏற்பாடு	பெருந்தன்மை	வைத்தியசாலை

அருள்	கற்றூண்	பஞ்சத்தாலும்	வேட்டையாடு
இராஜ்யம்	கற்பாறை	உயிர்க் கொலை	படையெடுத்து
குடிகள்	வாழ்க்கை	சக்கரவர்த்தி	பௌத்தமதம்
சட்டம்	சந்நியாசி	தழுவியபின்	நற்குண நற்செய்கை

அரும்பதவுரை: போதனை - கற்பனை. சத்திரம் - சாவடி. சக்கரவர்த்தி - அரசர்க்கரசன். கடுமை - அதிகம். கோபம் - சினம். (சிறு + அரசர் = சிற்றரசர். கல் + தூண் = கற்றூண். கல் + பாறை = கற்பாறை. கடுமை + கோபம் = கடுங்கோபம். நன்மை + குணம் = நற்குணம்.)

பயிற்சி

I. அணில், அவன், அவள், இந்த, இலைகள், உரல், உன்னுடைய—இவ்வார்த்தைகளில் உள்ள முதல் எழுத்துக்களைக் கவனி. அவன், அவள், இந்த, உன்னுடைய என்ற சொற்களில் அ, இ, உ என்ற எழுத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன. மற்ற வார்த்தைகளில் சுட்டுப்பொருள் இல்லை.

அ, இ, உ—இவ்வெழுத்துக்கள் ஒரு சொல்லின் முதலில் நின்று சுட்டுப்பொருளைத் தந்தால், சுட்டெழுத்துக்கள் எனப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களில் சுட்டுப்பொருள் உள்ள சொற்களை எடுத்துக் கூறுக.

(1) இவள் என் தங்கை.

(2) உன் வீடு எது ?

(3) அவர் யார் ?

III. பட்டம், மதம், ஆண்டு, போர், சட்டம்—இவற்றிற்கு இரு பொருள்கள் விளங்கும்படி வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

கேள்விகள்

1. அசோகர் யார்? அவர் எந்த நாட்டை ஆண்டார்? அசோகரின் காலம் யாது ?
2. அசோகரிடம் விளங்கிய குணங்கள் யாவை ?
3. கலிங்கப் போருக்குப் பிறகு, அவருடைய குணம் எப்படி மாறியது ?
4. அவர் நாட்டிற்குச் செய்த நன்மைகள் யாவை ?
5. அவர் எந்த மதத்தைத் தழுவினர்? அம்மதத்தை அவர் எவ்வாறு பரவச் செய்தார் ?

---

5. வேஷக்காரனை மோசக்காரன் ஏமாற்றியது

ஓர் ஊரில் ஒருவன் மடம் ஒன்று கட்டிக்கொண்டு, அதில் சந்நியாசி வேஷத்துடன் வசித்து வந்தான். அவன் பிறரை ஏமாற்றிப் பொருள் பறிப்பது வழக்கம். அவன் தான் தேடிய பணத்தை யெல்லாம் ஒரு கந்தை யில் முடிந்து, தன் இடுப்பில் கட்டிக்கொண்டு கவனமாகப் பாதுகாத்து வந்தான்.

அவன் இவ்விதம் பணத்தைப் பாதுகாப்பது அந்த ஊரிலுள்ள ஒரு வஞ்சகனுக்குத் தெரிந்தது. அவன் ஒருநாள் மடத்தை அடைந்து, போலிச் சந்நியாசியின் காலில் விழுந்து வணங்கி மிகவும் ஒடுங்கி நின்ருன். போலிச் சந்நியாசி, "அப்பா, நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?" என்று அவனைக் கேட்டான். "ஐயனே, எனக்கு ஒருவரும் இல்லை; திக்கற்ற என்னைக் காப்பது உங்கள் பாரம்," என்று சொன்ஞன் வஞ்சகன். அதைக் கேட்ட சந்நியாசி, "நீ அஞ்ச வேண்டா; கடவுள் உனக்குத் துணை செய்வார்," எனக் கூறினுன்.

அன்று முதல் அவ்வஞ்சகன் சந்நியாசிக்குப் பணி விடை செய்துவந்தான்; சந்நியாசி சொன்ன சொல்லைத் தட்டாமல், அவன் மனம்போல நடந்து வந்தான். சந்நியாசிக்கும் அவனிடத்தில் நம்பிக்கைஉண்டாயிற்று. அது தெரிந்த அவ்வஞ்சகன், "சந்நியாசியை ஏமாற்ற எப்பொழுது காலம் வாய்க்கும் ?" என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அடுத்த ஊரில் வசித்த ஒருவன் சந்நி யாசியைத் தன் வீட்டில் உண்ண அழைத்தான். சந்நி யாசி தன் சீடனையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போனான். இருவரும் உண்டபிறகு புறப்பட்டு மடத் துக்கு வந்துகொண்டிருந்தனர். சிறிது தூரம் வந்த பிறகு, வஞ்சகன் சந்நியாசியைப் பார்த்து, "ஐயனே, என்ன செய்வேன்! நான் மிகவும் கொடிய பாவியாகி விட்டேனே!" என்று வருத்தத்துடன் சொன்னான்.

சந்நியாசி, "அப்பனே ஏன் இப்படி வருந்து கிறாய் ? உனக்கு என்ன நேர்ந்தது ?" என்று கேட்டான். "சுவாமி, 'அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாகாது,' என்று தாங்கள் உபதேசித்தீர்கள். அதற்கு விரோத மாக நாம் உண்ட வீட்டுத் துரும்பை யான் என் தலையில் கொண்டுவந்து விட்டேன். இந்தப் பாவத்தை எப்படிப் போக்குவேன்!" என்று மறுபடியும் வருந்தி னான் வஞ்சகச் சீடன்.

"அப்பா, அதற்கு என்ன செய்வது நீ மனமார அதை எடுத்து வரவில்லையே! உனக்குத் தெரியாமல் உன் தலையில் ஒட்டி வந்ததைப்பற்றி, நீ ஏன் கவலைப் பட வேண்டும்? அதை நீ எடுத்து எறிந்துவிடு," என் றான் கபட சந்நியாசி.

"சுவாமி, அப்படிச் செய்வது பாவம்; தாங்கள் இங்கே சற்று நேரம் நில்லுங்கள்; நான் ஒரு நொடியில் இதை விருந்திட்டவன் வீட்டில் சேர்த்துவிட்டு வருகிறேன்," என்று போலிச்சந்நியாசியிடம் உத்தரவு பெற்று ஓடினுன் வஞ்சகன்.

அவன் விரைந்து ஓடுவதுபோலப் பாசாங்கு செய்து, செடி மறைவில் ஒளிந்திருந்து துரும்பை

எறிந்துவிட்டு, மறுபடியும் ஓடி வந்தான். அதனைக் கண்ட போலிச்சந்நியாசி, "இவன் பிறர் பொருளை இச்சிக்காத உத்தமன்," என்று எண்ணி அவனிடத்தில் அதிக நம்பிக்கை வைத்துவிட்டான்.

சிலநாள் சென்ற பிறகு, போலிச்சந்நியாசி, பணம் முடிந்து வைத்திருந்த கந்தையைத் தன் சீடனிடம் கொடுத்துவிட்டுக் குளிக்கப்போனுன். அவனும் அதை

வைத்துக்கொண்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். சிறிது தூரம் சென்ற சந்நியாசி, அங்கு இரண்டு ஆடுகள் இரத்தம் சிந்தச் சண்டை செய்வதையும், அந்த இரத்தத்தைக் குடிக்க நரி ஒன்று காத்திருப்பதையும் கண்டு வியப்படைந்தவனாய், அங்கேயே நின்றுவிட்டான். இதனால் போலிச்சந்நியாசி வரத் தாமதப்படவே, இதுதான் சமயம் என்று கந்தையைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு வஞ்சகன் ஓட்டம் பிடித்தான்.

போலிச்சந்நியாசி குளித்துவிட்டுத் திரும்பி வந்தான்; சீடனை எவ்விடத்திலும் தேடிக் காணாமையால், கத்திக் கூப்பிட்டான். ஏன் என்பார் எவரும் இல்லை. "ஐயோ! என் பணத்தைப் பாவி மோசம் செய்துவிட்டானே! இனி என் செய்வேன்!" என்று அழுது துக்கத்தில் முழுகினான்.

'வேஷம் மோசம் செய்யும்.'

மடம்	ஒடுங்கி	பறிப்பது	தாமதப்படவே
பாரம்	துரும்பு	வஞ்சகன்	விருந்திட்டவன்
சீடன்	விரோதம்	திக்கற்ற	உத்தேசித்தீர்கள்
வேஷம்	பாசாங்கு	நொடியில்	அன்னமிட்டவர்
போலி	உத்தமன்	இச்சிக்காத	கபடசந்நியாசி
பாவம்	கக்கத்தில்	போக்குவேன்	காலம் வாய்க்கும்
சுவாமி	முழுகினால்	கன்னமிடல்	எதிர்பார்த்துக் [கொண்டு

அரும்பதவுரை: பாரம் - சுமை, பொறுப்பு. விரோதம் - பகை. உத்தமன் - சிறந்தவன். திக்கு - ஆதரவு, திசை. இச்சிக்காத - விரும்பாத. (அன்னம் + இடல் = அன்னமிடல். திக்கு + அற்ற = திக்கற்ற.)

பயிற்சி

I. சுட்டெழுத்துக்களைப்பற்றி முன் பாடத்தில் படித்தீர்கள். அதுபோலவே வினப்பொருளைத் தரும் எழுத்துக்களும் சில உண்டு. (வினா=கேள்வி) பின்கண்ட உதாரணங்களில் வினப்பொருளைக் காட்டும் எழுத்துக்கள் எவை எவை என்று கவனித்துச் சொல்லு.

(உ-ம்.) எலி, ஏணி, ஏன், எது, யார், நீயா, யானை, அவனோ.

ஆ, எ, ஏ, ஓ, யா என்ற எழுத்துக்கள் வினப்பொருளைத் தரும்போது **வினவெழுத்துக்கள்** எனப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களில் வினவெழுத்துக்கள் உள்ள இடங்களை எடுத்துக் கூறு.

(1) அம்மா, அப்பா வந்தாரா ?
(2) உனக்கு வயது என்ன ?
(3) இது யாருடைய புத்தகம் ?

III. கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) போலிச் சந்நியாசி ஊராரை——ப்பொருள் ——.
(2) ஆனல் அவர் வேஷக்காரனிடம்——போனர்.
(3) அன்னமிட்ட வீட்டில் —— ——.
(4) சந்நியாசி வேஷக்காரனைப் —— —— என்று நம்பினர்.

கேள்விகள்

1. இக் கதையில் வேஷக்காரன் யார் ? ஏன் அவனை வேஷக்காரன் என்று சொல்லவேண்டும் ? மோசக்காரன் யார் ? அவன் யாரை என்ன மோசம் செய்தான் ?

2. சந்நியாசிக்குப் பொருள் ஏது? அதை அவன் எப்படி வைத்துக்கொண்டிருந்தான்?
3. சந்நியாசி சீடனை ஏன் நம்பினான்?

---

6. நாட்டுப் பாட்டு

1. பிறந்த நாட்டினைப் போற்றுவமே—அதன்
பெருமை பலர்க்கும் சாற்றுவமே—புகழ்
சிறந்த மைந்தராய் வாழுவமே—ஒரு
தெய்வத்துக்கே தலை தாழுவமே.

2. பாரத நாடென்று பாடுவமே—உயர்
பண்டைச் சிறப்பினை நாடுவமே
நாவலர் பாடிய நாடெனவே—மெய்ஞ்
ஞானியர் மேவிய நாடெனவே.

3. வீரர் திலகங்கள் வாழ்ந்தனரே—அவர்
மெய்ப்பெரும் போர்செய்து வீழ்ந்தனரே
வீர சுவர்க்கமு மேவினரே—அதை
விண்ணவர் கண்டனர் கூவினரே.

4. புத்தர் பிறந்த புகழ்நாடே—அவர்
போதனை கேட்ட திருநாடே
உத்தமர் சங்கரர் தாய்நாடே—அதன்
உண்மைப் புகழினை யோதுவமே.

5. சத்திய வாய்மொழி சாற்றுகவே—அறத்
துண்மை நெறியினைப் போற்றுகவே
உத்தம வாழ்க்கை யிதுவெனவே—மறை
ஓதிய நாட்டினைப் போற்றுவமே.

6. மனத்துறு தூய்மை அறமெனவே—புகல்
வள்ளுவர் கண்ட நெறியினையே
இனத்தினர் யாவரும் ஏற்றிடவே—புரிந்
திம்மணி நாட்டினைப் போற்றுவமே.

7. தன்னல மற்றவர் வாழ்நாடே—உயிர்
தந்து புகழ்பூண்டோர் தாய்நாடே
இன்னிசை ஓவியம் சிற்பமெலா நிறைந்
தெங்கும் புகழுற வாழியவே.

மறை	ஓவியம்	ஓதுவம்	உண்மை நெறி
அறம்	சிற்பம்	சாற்றுவம்	புகழ் பூண்டோர்
புகழ்	ஏற்றிட	போற்றுவம்	தன்னல மற்றவர்
மேவிய	சத்தியம்	விண்ணவர்	மெய்ஞ்ஞானியர்
தூய்மை	சுவர்க்கம்	மைந்தராய்	பண்டைச்சிறப்பு
நாவலர்	வாய்மொழி	தலைதாழுவம்	வீரர்திலகங்கள்

அரும்பதவுரை: புகல் - சொல். விண் - வான். விண்ணவர் - வானவர், தேவர். சாற்றுவம் - சொல்லுவோம். சத்தியம் - வாய்மை, உண்மை. நாவலர் - புலவர். மேவிய - அடைந்த. திலகம்-மேன்மை, பொட்டு. திலகர்-மேலானவர்.

பயிற்சி

I. (1) சங்கு, பஞ்சு, நண்டு, பந்து, கம்பு, கன்று - இச்சொற்களில் இரண்டாவது எழுத்துக்களின் உச்சரிப்பைக் கவனி. அவை மெலிய ஓசையுடையவை. அவ்வொலிகள் மூக்கினல் பேசுவதுபோல் தெரியும்.

(2) சுக்கு, பேச்சு, பட்டு, முத்து, உப்பு, புற்று - இவ்வார்த்தைகளில் உள்ள இரண்டாவது எழுத்துக்களின் உச்சரிப்பைக் கவனி. அவை அழுத்தமாக (வலிமையாக) உச்சரிக்கப்படுகின்றன.

(3) சாய்வு, மார்பு, மெல்லு, அவ்வை, தாழ்வு, முள் - இவ்வார்த்தைகளிலுள்ள இரண்டாவது எழுத்துக்களின் உச்சரிப்பையும் கவனியுங்கள். அவை மெலிய ஓசையுடையனவும் அல்ல; வலிய ஓசையுடையனவும் அல்ல; நடுத்தரமான ஓசை யுடையவை.

(4) மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும். க் ச் ட் த் ப் ற் என்ற இந்த ஆறு எழுத்துக்களும் **வல்லினம்** அல்லது **வல்லெழுத்துக்கள்** எனப்படும். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற இந்த ஆறு எழுத்துக்களும் **மெல்லினம்** அல்லது **மெல்லெழுத்துக்கள்** எனப்படும். ய் ர் ல் வ் ழ் ள் என்ற இந்த ஆறு எழுத்துக்களும் **இடையினம்** அல்லது **இடையெழுத்துக்கள்** எனப்படும்.

(5) பின்வரும் சொற்களிலுள்ள ஒற்றெழுத்துக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவை ? புத்தகம், கல்வி, கேள், சொல், நெற்றி, மரங்கள்.

II. நம் தாய்நாட்டின் பண்டைச் சிறப்பைப் பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

மாதிரி: நம் நாட்டில் நாவலர் பலர் பிறந்தார்கள்; மெய்ஞ்ஞானியர்கள் தோன்றினர்கள்.

கேள்விகள்

1. நமது தேசத்தில் தோன்றிய பெரியார் சிலரைக் கூறுக.
2. திருவள்ளுவர் நமக்குச் செய்துள்ள உபதேசம் என்ன ?
3. நம் நாட்டில் என்னென்ன கலைகள் உண்டு ?

7. மதன் மோகன் மாளவியா

பண்டித மதன் மோகன் மாளவியா என்ற பெரியார் நமது தேசபக்தர்களுள் ஒருவர். இந்தியாவின் வட பகுதியில் உள்ள ஐக்கிய மாகாணங்களில் சில நூற்றுண்டுகளாக வாழ்ந்துவரும் ஒரு பெரிய பண்டித வம்சத்தில் இவர் பிறந்தார். இந்தப் பரம்பரையினருக்கு 'மாளவியா' என்ற பட்டம் உண்டு.

பிரயாகை என்ற புண்ணிய க்ஷேத்திரமாகிய அல்லகபாத் நகரத்தில் இப்பெரியார் இருக்கிருர். காஷ்மீரத்தில் நெடுங்காலமாக வாழ்ந்த சில பண்டிதர்கள் ஐக்கிய மாகாணங்களிற் குடியேறினுர்கள். இப்படி வந்த குடும்பங்களில் இக் குடும்பமும் ஒன்ருகும்.

மதன் மோகனர் இளம்பருவத்தில் ஊக்கத்தோடு கல்வி பயின்று சட்டப் பரீக்ஷைகளில் தேறி, நியாய வாதத் தொழில் செய்ய முன்வந்தார். ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல பயிற்சிபெற்றுப் பெரிய சபைகளில் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே பேசும் புலமை பெற்ருர். வடநாட்டுப் பாஷையாகிய ஹிந்தியில் நன்ருக எழுதவும் பேசவும் தெரிந்துகொண்டார். இங்கிலீஷ் பாஷையிலும் நல்ல பயிற்சி பெற்றுப் பெருங் கூட்டங்களில் கம்பீரமாகப் பேசத்தக்க திறமையும் பெற்ருர்.

எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், அதன் உண்மை முழுவதையும் ஆராய்ந்து அறியும் நுட்ப அறிவு இவருக்கு உண்டு. தேசத்துக்காகத் தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆவல் இவரிடம் குடிகொண்டுள்ளது. அகில இந்திய காங்கிரஸ் என்ற தேசிய மகா சபை ஐம்பது வருஷங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட

போது, மாளவியா அந்தச் சபையில் சேர்ந்தார். இன்றும் அவர் காங்கிரஸ் கொள்கைகளை ஆதரித்து ஒத்துழைத்து வருகிறார்.



நம் தேசத்தின் கைத்தொழில் நிலைமையைப்பற்றி ஆராய்வதற்காக, அரசாங்கத்தார் நியமித்த ஒரு பெரிய சபையில் மாளவியா எடுத்துரைத்துள்ள கருத்துக்கள், அவரது அறிவின் மேன்மையையும், தேசாபிமானத்

தையும் நன்கு விளக்குகின்றன. இந்துக்களும், முஸ்லீம்களும் வேற்றுமையின்றி ஒற்றுமையாய் இருப்பதே நாட்டுக்கு நன்மை தருவதாம் என்பது இவர் கருத்து. இந்துக்களில் எல்லாச் சாதியாரும் ஒத்து வாழ வேண்டும் என்று இவர் கூறி வருகிறார்.

எந்த உயர்ந்த விஷயத்தையும் இந்திய சட்டசபையிலும், காங்கிரஸிலும் இப் பெரியவர் எடுத்துப் பேசும்போது விஷயக் குறிப்பில்லாமலே நினைவோடு விஷயத்தைத் தொடர்ச்சியாகவும், அழகாகவும் பேசுவார். அரசாங்கத்தாருக்கு இவரிடம் மிகுந்த மதிப்புண்டு. காசி க்ஷேத்திரத்தில் பழமையான கல்விமுறை ஓங்கி வளர்வதுபோலவே, புதுக்கல்வி முறையும் செழிக்க வேண்டுமென்ற எண்ணத்தால், இந்து சர்வ கலா சாலையை இவர் தொடங்கினார். இக்காலத்தில் இந்தியாவிலுள்ள சர்வ கலாசாலைகளுள் அது மிகவும் சிறந்ததாக விளங்குகிறது.

இந்து சர்வ கலாசாலையில் பழைய கல்வியும், புதுக் கல்வியும் கலந்து மணம் வீசுகின்றது. இக்கலா நிலயத்தின் பொருட்டு மதன் மோகனர் தம் அறிவு, ஆற்றல், செல்வாக்கு எல்லாவற்றையும் பயன்படுத்தி வருகிறார்; பல பிரபுக்களிடம் நன்கொடை பெற்று அதை வளர்த்து வருகிறார். இந்தச் சர்வ கலாசாலை ஒன்றே இப்புண்ணியசீலரது புகழை என்றும் மறையாமல் நிலைநிறுத்தத்தக்கது. எழுபது வயதுக்கு மேலாகியும் இளைஞர்போல உழைக்கும் இப் பெரியவர், இன்னும் பலகாலம் இத்தன்மையான பரோபகார தருமங்கள் செய்து வாழ்வாராக.

ஆவல்	பட்டம்	மகாசபை	கலாநிலயம்
தேசீய	பரம்பரை	ஊக்கத்தோடு	சட்டப்பரீக்ஷை
தொண்டு	வடபகுதி	கம்பீரமாக	பயிற்சிபெற்று
புலமை	நன்கொடை	நிலைநிறுத்த	குடியேறினர்கள்
திறமை	காங்கிரஸ்	ஸம்ஸ்கிருதம்	புண்ணியக்ஷேத்திரம்
கொள்கை	மதிப்புண்டு	இளைஞர்போல	சர்வகலாசாலை
பண்டிதர்	பரோபகாரம்	புண்ணியசீலர்	தொடர்ச்சியாக

அரும்பதவுரை: பண்டிதர் - புலவர், அறிவாளி. பரம்பரை - தலைமுறை. பரோபகாரம் - பிறருக்கு உதவி. புண்ணியம் - நல்வினை. புண்ணிய க்ஷேத்திரம் - தூய இடம். கம்பீரம் - பெருமை.

பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர், வினைச் சொற்களை எடுத்துக்கூறுக. அவற்றுள் எந்தெந்த பெயர்ச் சொற்கள் ஒருமையைக் குறிக்கின்றன? எந்தெந்த சொற்கள் பன்மையைக் குறிக்கின்றன:

(1) புறாக்கள் ஆகாயத்தில் பறக்கின்றன.
(2) குளத்தில் நீர் நிரம்பி இருக்கிறது.
(3) பலாப்பழம் சுவையுள்ளது.
(4) அப்பா எனக்கு இரண்டு சட்டைகள் தைத்தார்.

II. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) மாளவியா ஒரு———.
(2) அவர்———உழைக்கிறார்.
(3) அவர்———பேசுவார்.
(4) அவர் விஷயங்களின் உண்மையை——— ———நுட்ப அறிவு———.
(5) அவர் காசியில் ஓர் ——— ——— ——— நடத்தி வருகிறார்.

கேள்விகள்

1. மாளவியா எந்தெந்தப் பாஷைகளில் புலமை பெற்றவர்?
2. இளமையிலிருந்தே அவரிடம் அமைந்துள்ள குணங்கள் யாவை?
3. தேசமுன்னேற்றத்தில் இவருடைய கருத்து என்ன?
4. கல்வியின்பொருட்டு இவர் செய்துள்ள சிறந்த காரியம் யாது?
5. இவருடைய பேச்சின் சிறப்பு என்ன?

---

8. கைத்தொழிற் பொருட்காட்சி

மகன்: அப்பா, இது என்ன திருவிழாக் கூட்டமா? இங்கே என்ன கோயில் இருக்கிறது?

தந்தை: குழந்தாய், இது ஒரு கைத்தொழிற் பொருட்காட்சி சாலை. நம் நாட்டில் நடைபெறும் பல

வகைக் கைத்தொழில்களாலும் உற்பத்தியாகும் பொருள்கள் இங்கே வந்திருக்கும்.

மகன்: ஏதாவது வேண்டுமானுல் கடைகளுக்குப் போய் வாங்கி வரக்கூடாதோ! இவ்வளவு கூட்டமும், உள்ளே போகும் வழியும், வெளியே வரும் வழியும், ஆடம்பரமும், காட்சியும் எதற்காக?

தந்தை: குழந்தாய், நம் நாட்டில் இன்னின்ன தொழில்கள் நடக்கின்றன, இன்னின்ன பொருள்கள் செய்கிருர்கள், இன்ன ஊரில் இன்ன பொருள் மலிவாகக் கிடைக்கும் என்னும் உண்மைகள் நாம் இப் பொருட்காட்சியைக் காண்பதால் விளங்கும்.

மகன்: எந்தப்பொருளை எந்த ஊரிற் செய்தால் நமக்கென்ன? ஏதாவது வேண்டியிருந்தால், காசு கொடுத்து வாங்கிக்கொண்டு வந்தால் போகிறது.

தந்தை: அப்படி எண்ணக்கூடாது. நம் நாட்டில் செய்த பொருளாயிருந்தால், விற்ற பணம் நம் ஜனங்களுக்கே பயன்படும். அயல்நாட்டுப் பொருளாயிருந்தால், பணம் அயல்நாட்டுக்கே போகும். ஏழைகளே மிகுந்துள்ள நம் நாட்டில் நாம் இதை நன்ருய் யோசிக்கவேண்டும்.

மகன்: அப்பா, இதோ உள்ளே போகும் வழி. இதன் வழியாய் நாம் நுழைவோம். நமக்கு வேண்டிய பொருள்கள் இருந்தால், வாங்கிக்கொண்டு வரலாமா?

தந்தை: இன்று காட்சி முழுவதையும் சுற்றிப் பார்ப்போம். இன்னெரு நாள் வந்து வேண்டியதை வாங்கிச் செல்லலாம்.

மகன்: அப்பா, இதோ, சோப்புகளைக் கோபுரம் போல் அடுக்கியிருக்கிறார்கள். இந்தச் சோப்புகள் எந்த ஊரில் செய்யப்பட்டவை?

தந்தை: ஒரு பெட்டியை வாங்கிப் பார். ஏதாவது தெரிகிறதா?

மகன்: ஏதோ ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது.

தந்தை: இந்த வரிசையில் ஆறு சோப்புக்கடைகள் இருக்கின்றன. கள்ளிக்கோட்டை, மைசூர், கல்கத்தா, பம்பாய், சென்னப்பட்டணம் முதலிய நகரங்களில் செய்யும் சோப்புகளை இங்கே வைத்திருக்கிறார்கள்.

மகன்: அங்கு என்ன செய்கிறார்கள்? ஏதோ புகை கிளம்புகிறதே. தீப்பிடித்து விடப்போகிறது!

தந்தை: சோப்பு செய்யும் விதத்தை இங்கே செய்து காட்டுகிறார்கள். தெரிந்துகொண்டால், அது போலவே நாமும் செய்யலாம்.

மகன்: அப்பா, இந்தக் கண்ணாடிக் கடையைப் பாருங்கள். சீசா, சிம்னி, டம்ளர் எல்லாம் அடுக்கி வைத்திருக்கிற அழகு நன்றாய் இருக்கிறது.

தந்தை: இந்தக் கண்ணாடிச் சாமான்கள் 'ஒகேல்' தொழிற்சாலையிலிருந்து வந்தவை. இன்னும் வடநாடுகளில் வேறு இடங்களிலும் கண்ணாடித்தொழில் நடைபெறுகிறது.

மகன்: இந்த வளையல்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! தங்கைக்கு ஒரு ஜதை வாங்கிப் போகலாமா?

தந்தை: நம் நாட்டில் வெகு நாளாய் வளையல் செய்யும் தொழில் அதிகமாய் இருந்துவருகிறது. பாண்டிய நாட்டில் சங்கை அறுத்து வளையல்களும், மோதிரங்களும் செய்து வந்தனர். இப்பொழுது சில இடங்களில் கண்ணுடி வளையல்கள் செய்யப்படுகின்றன.

மகன்: இந்தப் பொம்மைக் கடையைப் பாருங்கள்; அப்பா! கலைமகள் பதுமை எவ்வளவு அழகாய் இருக்கிறது! மஹாத்மாகாந்தி பொம்மையின் அழகைப் பாருங்கள்! இதோ! பாரதமாதா! ஹா! என்ன அழகு! இவற்றை எல்லாம் வாங்கவேண்டும் அப்பா!

தந்தை: வாங்குவதற்கு இன்னொருநாள் வருவோம் என்று சொன்னேனே.

மகன்: இதோ, ஒரு பாத்திரக்கடை இருக்கிறது. இது என்ன பாத்திரம்?

தந்தை: இது வெண்கலப் பாத்திரம். ஆனாலும் இதில் புளி, மோர் முதலிய புளிக்கும் பொருள்களை வைத்தால் கைத்துப் போகாது. கைக்காத பாத்திரம் என்று நாம் இவற்றைச் சொல்கிறோம். கற்சட்டிகளை இப்பொழுது யாரும் தேடுவதில்லை; இந்தப் பாத்திரங்களையே வாங்குகிறார்கள்.

மகன்: அடே அப்பா! எவ்வளவு பெரிய பென்ஸில்! இதைப் பிடித்தெழுத யாரால் முடியும்?

தந்தை: இந்தப் பென்ஸில் எழுதுவதற்காக இல்லை. இது பென்ஸில் கடை என்று தெரிவதற்காகவே இங்கே தொங்கவிடப்பட்டிருக்கிறது. இந்தப் பென்ஸில்கள் எல்லாம் சென்னப்பட்டணத்தில் செய்யப்பட்டவை.

மகன் : நம் நாட்டில் பௌண்டன்பேனு செய்கிறார்களா ? அப்படியிருந்தால் எனக்கு ஒன்று வேண்டும்.

தந்தை : இதோ பார். 'தயாளபாக்' என்று போட்டிருக்கிறது. தயாளபாக் என்பது வடநாட்டில் உள்ள ஓர் இடம். அங்கே ஒற்றுமையாகப் பலர் சேர்ந்து ஒரு குருவின்கீழ் அடங்கிப் பலவகைத் தொழில்கள் செய்கிறார்கள். அவர்கள் பௌண்டன் பேனுக்கள் செய்துவைத்திருப்பதைப் பார்.

மகன்: மின்சாரவிளக்கு நம் நாட்டில் செய்கிறார்களா ? செய்தால் நம் வீட்டுக்கு அந்த விளக்கையே வாங்கவேண்டும், அப்பா !

தந்தை: வங்காளத்திலும், மைசூரிலும் செய்கிறார்கள். இந்தக் கடையில் அவை இருப்பதைப் பார்.

மகன்: இவை யெல்லாம் நம் நாட்டில் செய்த பொருள்கள்தானே ? இன்னும் என்னென்ன செய்கிறார்கள் ?

தந்தை: காகிதம் செய்கிறார்கள். இரும்பினால் பொருள்கள் பல செய்யப்படுகின்றன. ஒவ்வொன்றையும் பார்த்து வரலாம் வா. இனிமேல் மோட்டார் வண்டி கூட செய்யப் போகிறார்கள்.

மகன்: அப்பா, கால் வலிக்கிறது. இன்னொரு நாள் வருவோம்.

ஜதை	சோப்பு	மலிவாக	அடுக்கிவை
ஒகேல்	காகிதம்	கலைமகள்	உற்பத்தியாகும்
பதுமை	கற்சட்டி	இன்னின்ன	பாரதமாதா
சிம்னி	கைத்து	மிகுந்துள்ள	பௌண்டன்பேனு
டம்ளர்	கண்ணாடி	தயாளபாக்	பொருட்காட்சிசாலை

அரும்பதவுரை: ஜதை - ஜோடி, இரண்டு. பதுமை - பொம்மை. உற்பத்தியாகும் - உண்டாகும். மாதா - தாய். பாரதமாதா - இந்தியத்தாய். (கல்+சட்டி=கற்சட்டி.)

பயிற்சி

I. (1) வீரன், புறா, தென்னை, குதிரை, தவளை, பேனா, மோதிரம் — இவைகள் பெயர்ச்சொற்கள். இவைகள் முறையே மனிதன், பறவை, மரம், மிருகம் முதலிய பல பொருள்களின் பெயர்கள்.

(2) இம்மாதிரியே வீடு, நிலயம், பாடசாலை, வானம் —இவைகளும் பெயர்ச்சொற்கள்—இவைகள் இடங்களின் பெயர்கள்.

(3) இம்மாதிரியே நாள், வாரம், நிமிஷம், நேற்று - இச்சொற்கள் காலத்தைக் குறிக்கும் பெயர்கள்.

(4) பொருள்களின் பெயர்களைக் குறிப்பவை **பொருட்பெயர்** எனப்படும். இடங்களின் பெயர்களைக் குறிப்பவை **இடப்பெயர்** எனப்படும். காலத்தின் பெயர்களைக் குறிப்பவை **காலப்பெயர்** எனப்படும்.

II. பொருட்பெயர், காலப்பெயர், இடப்பெயர் இவை ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணங்கள் கூறுக.

III. காட்சிசாலை — இம்மாதிரியே சாலை என்று முடியத்தக்க வேறு மூன்று வார்த்தைகளைச் சொல்லு.

IV. இப்பாடத்திலுள்ள படத்தில் நீ காணும் விஷயங்களைப்பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

கேள்விகள்

1. கைத்தொழிற் பொருட்காட்சிகள் எதற்காக நடத்தப்படுகின்றன?
2. தமிழ் நாட்டில் நடக்கும் தொழில்களில் சில சொல்லுக.
3. வங்காளத்தில் நடக்கும் தொழில்கள் எவை?

4. தயாளபாக்கைப்பற்றி உனக்குஎன்ன தெரியும்?
5. சுதேசிப் பொருள்களை நாம் ஏன் வாங்க வேண்டும்?

9. இசையின் இன்பம்

திருவிழாக் காலங்களில் வாத்தியம் வாசிக்கும் இடத்தில் பெருங்கூட்டம் கூடுகிறது. கல்யாணங் களிலே பல பெண்கள் இனிய குரலோடு பாடுவதை



நாம் கேட்கிறோம். அழுத குழந்தைகளை த்தூங்க வைப்பதற்கு அன்னை தாலாட்டுப் பாடுகிறாள். பாம்பு கள், குழல் ஊதுவ தைக் கேட்டால் ஆனந்தமாய் நின்று கேட்கின்றன. குழந் தைகள் முதல் கிழவர் கள்வரையில் எல்லோருக்கும் இன்பம் தரும் சங்கீதம் எவ்வளவு சக்தி உள்ளது! பிணியினால் வருந்தும் ஜனங் களின் முன் பாட்டுப் பாடி னால், அவர்கள் நோயினால் படும் துன்பத்தை மறந்து ஆனந்தப்படுகிறார்கள். போருக்குப்போகும் வீரர்க ளுக்கு வாத்திய முழக்கம் உற்சாகம் ஊட்டுகிறது.



'கிராமபோன்' தட்டுக்களால் நாம் கண்ணுலே காணுத பலர் பாட்டுக்களைக் கேட்டு மகிழ்கின்ருேம்.



'ரேடியோ' உள்ள இடங்களிலிருந்து பல்லாயிர மைல்களுக்கப்பால் பாடும் பாட்டுக்களையும் தெளிவாகக் கேட்கிருேம்.

இப்படிப் பலவகையாய் நாம் கேட்கும் பாட்டுக்கள் நம் மனக் கவலையைப் போக்கி இன்பம் தருகின்றன. வீணை, பிடில் முதலிய நரம்பு வாத்தியங்களால் வாசிக்கப்படும் பாட்டு ஆனந்தம் தருகிறது. குழல், நாதசுரம் முதலிய வாத்தியங்களை நன்ருக வாசிக்கும் இடங்களில் கூட்டம் கூடுகிறது. இனிய குரல் உள்ளவர்கள் வாய்ப்பாட்டுப் பாடினுல் மிகுந்த சந்தோஷம் தரும்.

இன்னெரு வகைப் பாட்டு உண்டு. தமிழ்ப்பாட புத்தகங்களில் சில செய்யுட்களை நாம் படிக்கிருேம்.

வசனபாடங்களை எழுத்துக்கூட்டி வாசிக்கிறோம். குழந்தைகள் பாட்டுக்களைப் பாடவும் கேட்கவும் உற்சாகம் கொள்வார்கள்.

முதலில் ஒருவர் பாடிக்காட்டினால், அந்த இசையின்படி ஒழுங்குதவறாமல், குழந்தைகள் எல்லோரும் பாடுவார்கள். பாட்டுக்களைப் பார்த்துப் படிக்கும்போது,



பாடும் முறையை அறிந்து படிப்பது நல்லது. தமிழில் பல வகையான பாட்டுக்கள் உண்டு. எல்லாப் பாட்டுக்களையும் ஒரே விதமாகப் பாட முடியாது.

சில பாட்டுக்கள் தாளத்தோடு இசைத்துப் பாடத் தக்கவையாய் இருக்கும். சில பாட்டுக்கள் தாளம் இல்லாமலே, பாடத் தகுந்தவையாய் இருக்கும். பாட்டுக்களில் சொல்லப்படும் செய்திகளுக்குத் தகுந்த குரலும் வேண்டும். கோபத்தைக் குறிக்கும் இடத்தில் அழுவதுபோலப் பாடினால், நன்றாய் இருக்குமா? அழுகையை விளக்கும் இடத்தில் ஆனந்தம் தோன்றப் பாட முடியுமா? துள்ளிக் குதித்துப் பாடவேண்டிய பாட்டுக்களும் உண்டு. உட்கார்ந்து பாடவேண்டிய பாட்டுக்களும் உள. எந்தப் பாட்டைப் பாடினாலும், அதன் தன்மையை அறிந்து பாடவேண்டும்.

வகுப்புக்களிற் பாடம் படிப்பதற்காக உள்ள நேரத்தில் செய்யுளுக்கும் காலவரையறை உண்டு. கதைப்

பாட்டுக்கள், நாடகப்பாட்டுக்கள், கும்மி, சிந்து முதலிய பலவகைப் பாட்டுக்கள் பாடப்படுவதுண்டு. பாடுவது வீண் பொழுதுபோக்கு ஆகாது. மனமகிழ்ச்சி உண்டாவதற்குப்பாட்டு ஒரு முக்கியமான கருவியாகும்.

காலையிலும் மாலையிலும் குழந்தைகள் விளையாடுகிறார்கள். கைகால்களை அசைத்து விளையாடும்போது பாட்டுப் பாடினால், அக் காட்சி ஆனந்தமாயிருக்கும். கோலாட்டம், கும்மி முதலிய பாட்டுக்களைக் குழந்தைகள் குதித்துப் பாடுவது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது! எப்படிப் பாடினாலும் மனமகிழ்ச்சிக்கு ஏற்றதாயிருக்கும் பாட்டைப் பாடவேண்டும்.

வீணை	நாடகம்	கிராமபோன்	வாத்தியம்
பிடில்	முழக்கம்	வாய்ப்பாட்டு	பல்லாயிரம்
அன்னை	ரேடியோ	செய்யுட்களை	இசைத்துப்பாட
கருவி	நாதசுரம்	தாளத்தோடு	கால வரையறை
குழவி	உற்சாகம்	இசையின்படி	எழுத்துக்கூட்டி
கும்மி	சங்கீதம்	வசனபாடம்	ஒழுங்கு தவறாமல்
சிந்து	தாலாட்டு	வீண்பொழுது	பெருங்கூட்டம்

அரும்பதவுரை: உற்சாகம் - சந்தோஷம். இசை - சங்கீதம், இராகம், பண். காலவரையறை - கால அளவு.

பயிற்சி

I. (1) கை, கால், கண்—இவைகள் பெயர்ச்சொற்கள். இவைகள் உடலின் பாகங்களைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள். இம்மாதிரியே கிளை, தண்டு, வேர் என்பன மரத்தின் பாகங்களைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள். ஒரு பொருளினுடைய பாகத்தின் பெயரைக் குறிக்கும் சொல் சினைப் பெயர் எனப்படும்.

(2) காந்தி பொறுமை உள்ளவர்—இவ்வாக்கியத்தில் பொறுமை என்பது குணத்தின் பெயரைக் குறிக்கிறது. குணத்தின் பெயரைக் குறிக்கும் சொல் குணப்பெயர் அல்லது **பண்புப்பெயர்** எனப்படும்.

(3) உழவு ஒரு சிறந்த தொழில்—இவ்வாக்கியத்தில் உழவு என்ற பெயர்ச்சொல் ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கிறது. தொழிலின் பெயரைக் குறிக்கும் சொல் **தொழிற்பெயர்** எனப்படும்.

(4) பின்வரும் பெயர்ச்சொற்களில் ஒவ்வொன்றும் எந்த வகையைச் சேர்ந்தவை என்று கூறு. கோபம், காது, வெண்மை, குளிர்ச்சி, விரல், நெசவு, ஓட்டம், ஆட்டம், வேகம், கொம்பு.

II. ஆனந்தம், துக்கம், பெண்கள், பையன்கள், நல்லது, கெட்டது, பாடு, பாட்டு, படி, பாடம், இசைத்து, இசை, காண், காட்சி, அடுக்கி, அடுக்கு—இச்சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்கவும்.

கேள்விகள்

1. சங்கீதத்துக்கு உள்ள சக்தி என்ன?
2. இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும்? நாதசுரம், பிடில், ஆர்மோனியம், மத்தளம் இவைகள் எவ்வகைகளைச் சேர்ந்தவை?
3. பாடுவதில் கவனிக்க வேண்டிய முறைகள் யாவை?
4. பாட்டுக்களில் பலவகைகள் யாவை?
5. கிராமபோன், ரேடியோ என்பன எவை?

10. வீடு கட்டுதல்

ஆதிகாலத்தில் காடுகளில் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்த மனிதனுக்கு வீடுகட்டத் தெரியாது. அவன் வெய்யிலுக்கும் மழைக்கும் மர நிழலில் ஒதுங்கினான். மலைகளில் உள்ள பாறைகளின் இடுக்குகளில் மழைக்கு மறைந்து வசித்தான். சிங்கம், புலிகளைப்போலக் குகைகளில் பதுங்கி வாழ்ந்தான்; பள்ளம் பறித்து மேலே செத்தைகளைக் கூரையாகப் போட்டுக்கொண்டு தூங்கினான்; மரங்களின்மேலே கிளைகளின் நடுவில் படுக்கவும், இருக்கவும் இடம் செய்துகொண்டான்.

இப்படி வாழ்ந்த மனிதனுக்கு வீடு கட்டவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அவன் மண்ணைக் குழைத்துச் சுவர் வைக்கப் பழகினான். அதன்மேல் மரங்களை வெட்டிப்போட்டு இலை தழைகளால் மூடினான்; அதன்பின் தென்னையோலையால் கீற்று முடையக் கற்றான்; பனைமட்டைகளை வெட்டிவந்து அவைகளால் கூரை வேயவும் அறிந்தான்.

மனிதன் கம்பு, சோளம், நெல் முதலிய பயிர்களை அறுவடை செய்ததும், தானியங்களை எடுத்துக் கொண்டு தட்டைகளையும், வைக்கோலையும் கூரைமேல் போட்டான். இன்னும் பெரிய வீடாகக் கட்ட ஆசைகொண்டான்; கற்களைப் பொறுக்கி வந்து மண்ணோடு சேர்த்து உறுதியாகச் சுவர் எழுப்பினான்; பானை செய்யப் பழகிய பிறகு, வீடு கட்டச் செங்கல்

சுடலாம் என்று எண்ணினன்; மண்ணைக் குழைத்து அளவாக அறுத்துச் செங்கல் சுட்டான்; பின்பு சுண்ணும்பு செய்யும் தொழிலும் அவனுக்குத் தெரிந்தது.

அப்பால் செங்கல்லும், சுண்ணும்பும் சேர்ந்து மாளிகைகள் கட்டும் தொழில் வந்தது. நெடுங்காலம்



வீடுகட்டுதல்

நிற்கத்தக்க பெருங் கட்டிடங்களுக்கு வேண்டிய சுண்ணும்பில் கடுக்காய், நெல்லிக்காய், உளுந்து, வெல்லம் முதலியவற்றைக் கலந்து கட்டினல், அக்கட்டிடம் நெடுங்காலம் நிற்கும் என்று அவனுக்குப் புலப்பட்டது. இப்படிக் கட்டிய கட்டிடங்கள் இன்னும் நம் நாட்டின் பல பக்கங்களில் இருக்கின்றன. அவற்றை

இடிக்கப்போனல் நமது கை வலிக்கும்; கடப்பாரை மழுங்கும்; ஒரு செங்கல்கூடப் பெயராது.

கருங்கல் மலைகளைக் குடைந்து அமைத்த குகைக் கோவில்கள் பல நம் நாட்டில் உண்டு. கற்களைப்



வீடுகள்

பெயர்த்து வந்து மிகுந்த பொருட்செலவில் கட்டியுள்ள பல பெரிய கோவில்களும் உள்ளன. இக் கட்டிடங்கள் பூகம்பம் வந்தாலும், அழியாமல் நிமிர்ந்து நிற்கும் வன்மை உள்ளவை.

கல்லைப் பொடிசெய்து 'செமெண்ட்' என்ற ஒரு வகைச் சுண்ணும்பை இக்காலத்தில் செய்கிருர்கள். செங்கல்லும், சுண்ணும்பும் சேர்ந்த கட்டிடங்களில் செமெண்ட் மேல்பூச்சுக்கு உதவி வந்தது.

இக்காலத்தில் செமெண்டினுல் தூண்கள், உத்தரங்கள், படிகள், தொட்டிகள் முதலியவை மிகவும் உறுதியாகச் செய்யப்படுகின்றன. நெடுங்காலம் அசையாமல் நிற்கவேண்டிய கட்டிடங்களைச் செமெண்ட் அதிகம் சேர்த்துக் கட்டுகிருர்கள்.



அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய கட்டிடம்

நான்கு ஐந்து இரும்புக் கம்பிகளை நிறுத்தி அவற்றின் நடுவில் செமெண்டும், சிறு கற்களும் கலந்து கொட்டிச் செமெண்டின் உதவியால் நிற்க வைத்தால், எந்த உருவம் வேண்டுமென்ருலும் செய்துகொள்ளலாம். எல்லாம் ஒன்ருய்த் திரண்டு ஓர் உருவமாகி விட்டால், அப்புறம் அது எளிதில் உடையாது. பூகம்பத்தின் பிறகு குவெட்டாவிற் கட்டப்பட்ட பெரிய கட்டிடங்கள் எல்லாம் இப்படி செமெண்ட் சேர்த்தே கட்டப்பட்டவை.

நம் நாட்டிலுள்ள பெரிய கோவில்களும், அமெரிக்காவில் உள்ள ஆகாயம் அளாவும் கட்டிடங்களும், மனிதன் வீடுகட்டும் தொழிலில் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிருன் என்பதை நமக்கு நன்கு விளக்குகின்றன.

குகை	இடுக்கு	செங்கல்	ஆதிகாலம்
சேத்தை	தேர்ச்சி	திரண்டு	கட்டப்பட்ட
பதுங்கி	சுடலாம்	பூகம்பம்	நெல்லிக்காய்
பாறைகள்	குழைத்து	கடுக்காய்	மேல்பூச்சு
வெல்லம்	சிமெண்ட்	சுண்ணும்பு	விலங்குகளோடு
உளுந்து	குவெட்டா	மழுங்கும்	மலையைக் குடைந்து

அரும்பதவுரை: பூகம்பம் - பூமியின் ஆட்டம். ஆதி காலம் - முற்காலம். விலங்கு - மிருகம். குகை - பொந்து. திரண்டு - சேர்ந்து.

பயிற்சி

I. (1) அ, இ, உ—இவ்வெழுத்துக்கள் சுட்டுப் பொருளைத் தரும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும். அது போலவே அவன், அவள், அது, இவர், இது, உன் என்ற சொற்களும் சுட்டுப் பொருளைத் தருகின்றன.

சுட்டெழுத்துக்களின் அடியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்கள் **சுட்டுப்பெயர்** எனப்படும்.

(2) அவ்வாறே, எது, யார், எவன்—இப் பெயர்ச் சொற்களில் உள்ள முதல் எழுத்துக்கள் **வினவெழுத்துக்கள்.**

வினவெழுத்துக்களின் அடியாகப் பிறக்கும் பெயர்ச் சொற்கள் **வினப்பெயர்** எனப்படும்.

(3) பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினப்பெயர்களையும், சுட்டுப்பெயர்களையும் எடுத்துக் கூறுக.

இது யாருடைய புத்தகம் ?
உங்கள் வீடு எங்கே இருக்கிறது ?
அவர் அங்கே என்ன செய்கிறார் ?

II. ஆதிகாலம், நெடுங்காலம், பெயராது, பூகம்பம், இடுக்கு, பதுங்கி, குடைந்து, திரண்டு—இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க.

III. நீ வசிக்கும் வீட்டின் அமைப்பைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

கேள்விகள்

1. ஆதிகாலத்தில் மனிதன் எவ்வாறு வசித்து வந்தான்?
2. முதன் முதலாக மனிதன் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டினுன்?
3. கட்டிடங்கள் உறுதியாய் இருக்கச் சுண்ணும்பில் என்னென்ன பொருள்களைக் கலக்கவேண்டும்?
4. செமெண்ட் எந்தெந்த வகையில் உபயோகப்படுகிறது?

---

11. இன்சொல்

1. இனிய சொற்களைச் சொல்லுவ தாலே
எவர்க்கும் மகிழ்ச்சியுண்டாம்;
இனிய சொற்கள் இருக்கக் கடுஞ்சொல்லை
ஏனோ வுரைப்பதுவே.

2. கனிந்த நற்பழம் கொம்பி லிருக்கையில்
காயைப் பறிப்பதுண்டோ?
இனிய சொற்க ளெழுந்திடு நாவினில்
ஏன்கடுஞ் சொல்எழுமே.

3. பச்சைக் குழந்தையைப் பார்த்தே யழைத்துப்
பழக விரும்புபவர்,
இச்சையோ டின்சொல் உரைத்தே யழைத்திடில்
இனிதா யாடுவரே.

4. பள்ளிக்குப் போகும் பருவச் சிறுவனைப்
பார்த்துரை யாடுபவர்
உள்ளக் கனிவோ டினியசொல் சொன்னால்
ஓடி வருவானே.

5. வாளொடு வில்லம்பு வேலை யெடுத்து
வரும்பகை வீரனையும்
வாளொடு வில்லின்றி இன்சொல் உரைத்தே
வணங்கப் புரிந்திடலாம்.

6. வாதுக் கிழுத்து வழக்கெதி ராடியே
வம்புசெய்வோர் இருவர்
காதுக்குள் இன்சொல் புகுந்திடச் செய்தால்
கலகம் ஒடுங்கிடுமே.

7. கொள்ளை யடித்துப் பிறர்பொருள் கொள்ளவே
கூடிய கூட்டத்தையும்
மெள்ளவே சொல்லும் இனிய சொல்லாலே
விரைவிலே வென்றிடலாம்.

8. காக்கையும் குயிலும் ஓர்நிற மாகவே
காட்சி கொடுத்திடினும்
காக்கை குயிலின்முன் வாக்கைத் திறக்குமோ
காகா காவெனவே.

9. நண்பர் வளர்வதும் நாடு செழிப்பதும்
நல்ல இனியசொல்லால்
நண்பர் பிரிவதும் நாடு கெடுவதும்
நாவிற் கடுஞ்சொல்லால்.

10. புத்தரும் ஏசுவும் நற்சொல் உரைத்துப்
புவிமுழு தாளுவரே

உத்தமர் யாரும் இனிய சொல்லாலே
உலகை வென்றிடுவாரே.

ஏனே	கொள்ளே	வழக்கு	வாதுக்கிழுத்து
வேல்	கொள்ள	எதிராடி	வாக்கைத்திறக்கும்
வாள்	கொம்பு	புகுந்திட	பச்சைக்குழந்தை
வில்	குயில்	பகைவீரன்	இச்சையோடு
புவி	நண்பர்	கடுஞ்சொல்	பருவச் சிறுவன்
ஏசு	இன்சொல்	நாடுகெடுவது	உள்ளக்கனிவு

அரும்பதவுரை: உள்ளக் கனிவு - மனத்திருப்தி. புவி-உலகம். கொம்பு-சிறுகிளே. கடுமை + சொல் = கடுஞ்சொல்.

பயிற்சி

I. (1) ஒரு படி நெல் வாங்கி வா. ஏழுநாள் கொண்டது ஒரு வாரம். ஒரு வீசை நெய் என்ன விலே?—இவ்வாக்கியங்களில் ஒரு, ஏழு, படி, வீசை இவை எவற்றின் பெயர்கள்? ஒரு, ஏழு என்பவை எண்களே குறிக்கின்றன. படி என்பது முகத்தல் அளவைப் பெயரைக் குறிக்கிறது. வீசை என்பது நிறுத்தல் அளவைப் பெயரைக் குறிக்கிறது.

(2) எண்களின் பெயரைக் குறிக்கும் சொற்கள் எண்ணுப் பெயர் எனப்படும். அளவைகளின் பெயரைக் குறிக்கும் சொற்கள் அளவுப் பெயர் எனப்படும்.

II. பின்வரும் வாக்கியங்களிலுள்ள எண்ணுப் பெயர்களேயும், அளவுப்பெயர்களேயும் எடுத்துக்கூறு.

(1) ஒரு ஜதை வேஷ்டி வாங்கி வா.
(2) நாலு கெஜம் துணி கிழி.
(3) பன்னிரண்டு மரக்கால் கொண்டது ஒரு கலம் ஆகும்.

III. பின்வரும் வாக்கியங்களில், கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) இனிய______யாவரும் மகிழ்வர்.
(2) ______பேசுவது பழத்தைப் பறிப்பதுபோலாகும்.
(3) ______ ______காயைப் பறிப்பதுபோலாகும்.
(4) ______ சொற்களால் நாடு செழிக்கும்.
(5) ______ நண்பர் பிரிவார்கள்.
(6) கடுஞ்சொற்களால்______ ______.
(7) இனியசொற்களால்______வணங்கிடச்செய்யலாம்.

கேள்விகள்

1. இன்சொல்லால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. கடுஞ்சொல் பேசுவது எதைப்போன்றது ?
3. கடுஞ்சொல்லால் ஏற்படும் தீமைகள் யாவை ?

12. காகிதம்

நான் என் கதையைச் சொல்வது என்று ஆரம்பித்தால், அது பெரிய இராமாயணமாக முடியும். உலகத்தில் என்னை அறியாதவர் எவரும் இல்லை. எழுத்தறியாதவன் முதல் எல்லோரும் என்னைத் தேடுகிறார்கள். கோடீசுவரனுக்கும் என் தயவு வேண்டும். பிச்சைக்காரனுக்கும் நான் துணையாக இருப்பேன்.

“இப்பொழுது நீ எங்கே இருக்கிறாய்” என்று நீங்கள் என்னைக் கேட்காதீர்கள். நான் இப்போது குப்பை மேட்டிலே கிடக்கிறேன். பட்டம் செய்வதற்கு நான் உபயோகப்பட மாட்டேன் என்று ஒரு சிறுவன் சொன்னான். அதனால் எனக்கு மிகுந்த கோபமும் வருத்தமும் உண்டாயின.

என் பெருமையை நானும் அறிவேன்; உலகமும் அறியும். நான் ஒருவன் தோன்றவில்லையென்றால் புத்தகங்கள், பத்திரிகைகள் இப்படிக் கோடிக்கணக்கில் வளர்ந்திருக்க முடியுமா? நியாய ஸ்தலங்களில் நியாயவாதிகள் எல்லாம் என்னையே முன்னே நிறுத்தி வழக்காடுகிறார்கள். நான் ஒரு பரோபகாரி என்பதைக் குழந்தைகளும் அறிகிறார்கள்.



காகிதக்கூழ் தயாரித்தல்

காகிதம் உலர்ந்ததும் உருளையில் சுற்றப்படுதல்

நான் தோன்றுவதற்குமுன் இந்நாட்டிலே படிப்பில்லை என்று நான் கூறவில்லை. கிராமங்களில் யாரோ ஒருவர் இருவர் ஏடுகளைப் புரட்டிக்கொண்டு, பெரிய புலவர்களாய் இருந்தார்கள். ஆயிரக்கணக்கான பிள்ளைகள் ஒன்றுசேர்ந்து படித்த காட்சி, அக்காலத்தில் இருந்ததோ, இல்லையோ எனக்குத் தெரியாது. இப்பொழுது அரிச்சுவடி முதல் பெரிய நூல்கள் வரையில் எல்லாம்

என்னாலேயே வளர்ந்து, உலகத்தில் பரவி உலாவு கின்றன.

ஓர் ஏட்டில் ஒரு பிரதி எடுக்க எவ்வளவு நாள் ஆகும்? எழுத்தாணி பிடித்து விரல் எல்லாம் தேயுமே! இப்பொழுது எழுதுவதும் படிப்பதும் எத்தனை எளி தாயும், அழகாயும் வளர்ந்து பெருகிவிட்டன? இவை எல்லாம் யார் செயல் என்று எண்ணுகிறீர்கள்? எல்லாம் செய்ய வல்லவனாகிய என் செயலே அல்லவா?

நம் நாட்டில் வெகு காலமாகப் பனையோலைச் சுவடி களே என் வேலையைச் செய்தன. எகிப்து தேசத்தில் பாபிரஸ் என்ற என் சகோதரர் ஐயாயிரம் வருஷங் களாக இந்த வேலைக்கு உதவுகிறார். சீன தேசத்திலே நான்தான் முதலில் பிறந்தேன் என்று ஒரு பெரியவர் சொன்னார். முதலில் நான் எங்கே பிறந்திருந்தாலும், இந்நாளில் என் முன்னோரை எல்லாம் மூலையிலே தள்ளிவிட்டு நான் முன்னேறி யிருக்கிறேன். ஆகையால் என் பிறப்பிற்கே ஒரு பெருமை உண்டு.

சேற்றில் பிறந்த செந்தாமரையை எல்லாரும் கொண்டாடுகிறார்கள். சிப்பியில் பிறந்த முத்தைப்பணம் கொடுத்து வாங்குகிறார்கள். நானோ குப்பையிலேயே பிறந்து குப்பைக்கே வந்து சேர்ந்தேன்.

வைக்கோல், புல், மூங்கில் முதலியவை இந் நாட் டில் எங்கும் உண்டு. சிலவகைப் புற்கள் காட்டிலே யாருக்கும் பயன்படாமல் வீணே வளர்ந்து அழிகின் றன. அப்புற்களைக் காயவைத்துத் தண்ணீரிலே போட் டுக் கூழ்செய்துகொள்வர்.

மரக்கூழை நல்ல பழக்கம் உள்ளவர்களே செய்ய வேண்டும். அழுக்கு, தூசி, தும்பு இல்லாமல் அக் கூழை வடிகட்டி, ஈரம் போகச்செய்து, கீழே விரித்து என்னைப்போற் செய்வார்கள். நல்ல கூழ் கிடைத்தால் நான் மழமழப்பாயும், அழகாயும் இருப்பேன். குடிசைகளில் கிராம ஜனங்கள் எளிதாகச் செய்து கொண்டிருந்த என்னை, இக்காலத்தில் பெரிய மாளிகைகளில் அநேக எந்திரங்களின் உதவியாற் செய்து வளர்க்கிறார்கள். கிராமத்தார் கையில் நான் வளர்ந்த போது, எனக்கிருந்த உறுதி இப்பொழுது இல்லை. நான் என்னால் இயன்ற வேலையை உலகத்துக்குச் செய்து வருகிறேன்.

ஏடு	சிப்பி	வடிகட்டி	அரிச்சுவடி
துணை	தும்பு	வல்லவன்	பத்திரிகை
தூசி	தேயுமே	மூலையிலே	பிறப்பிற்கே
தயவு	எகிப்து	சீனதேசம்	பெருகிவிட்டன
பிரதி	முன்னேறி	எழுத்தாணி	கோடீசுவரன்
சுவடி	ஐயாயிரம்	மழமழப்பு	நியாயஸ்தலம்

அரும்பதவுரை: *நியாயஸ்தலம்* - கோர்ட், நியாயம் விசாரிக்கப்படும் இடம். ஸ்தலம் - இடம். வல்லவன் - சக்தியுள்ளவன். கோடீசுவரன் - கோடிரூபாய்க்குத் தலைவன். (கோடி + ஈசுவரன் = கோடீசுவரன்.)

பயிற்சி

I. (1) நான் வருகிறேன். நாங்கள் வருகிறோம். நீ வருகிறாய். நீங்கள் வருகிறீர்கள் - இவ்வாக்கியங்களில் நான், நாங்கள், நீ, நீங்கள் என்ற சொற்களைக் கவனி. பேசுகிறவர்கள் தம்மைக் குறித்துப் பேசும்போது **நான், நாங்கள்** என்பார்கள்.

நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்-இச்சொற்கள் **தன்மைப் பெயர்** எனப்படும்.

(2) முன்னின்று கேட்போரைக் குறிக்கும்போது, நீ, நீர், நீங்கள் என்பார்கள். இச்சொற்கள் **முன்னிலைப் பெயர்** எனப்படும்.

(3) தன்மை, முன்னிலை அல்லாத பெயர்கள் எல்லாம் **படர்க்கைப் பெயர்** எனப்படும்.

(உ-ம்.) அவன், அவள், அவர், அது, அவை, மரம், மாடுகள், மணி முதலியன.

(4) பின்வரும் வாக்கியங்களிலுள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்ச்சொற்களை எடுத்துக் கூறு.

நீ என்னுடன் விளையாட வருவாயா?
அவன் எங்களுடன் பேசமாட்டான்.
நீ உன் சிநேகிதர்களையும் அழைத்து வா.
அவர்கள் ஓடிப்போனார்கள்.

II. பின்வரும் சொற்றொடர்களைச் சரியானபடி சேர்த்துப் படி.

பிறருக்கு உதவி செய்பவர்	உலகம் அறியும்.
நியாயவாதி	முன்னேறி யிருக்கிறது.
பனையோலைச்சுவடி	நூல்கள் வளர்ந்தன.
காகிதம்	பரோபகாரி.
காகிதத்தின் பெருமை	மூலையிலே போயிற்று.
காகிதம் தோன்றியபின்	நியாயத்திற்கு வாதாடுவார்.

கேள்விகள்

1. காகிதம் செய்வதற்கு உபயோகிக்கும் பொருள்கள் யாவை?
2. காகிதம் செய்யப்படும் முறையைக் கூறு.
3. காகிதத்துக்கு உள்ள பெருமை என்ன?
4. காகிதத்தின் முன்னோர் என்றது எதைக் குறிக்கும்?

13. ராஜா ராம் மோகன் ராய்

வங்காளம் என்பது இந்தியாவின் வடகிழக்குப் பாகத்தில் உள்ள ஒரு தேசம். நூறு ஆண்டுகளுக்கு முன் அந்த நாட்டில் இரண்டு பெரியோர் தோன்றினர். அவர்கள் ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ராஜா ராம் மோகன் ராய் என்ற இருவரும் ஆவர். இவர்கள் இருவரும் உலகம் புகழும் சிறப்பு வாய்ந்தவர்கள்.

ராம் மோகனர் பிராமண வகுப்பில் பிறந்தவர். இவர் பெற்றோர் வங்காள நவாபுகளிடம் உத்தியோகம் செய்து, பெரும் பொருள் தேடியிருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 'ராய்' என்ற பட்டம் நவாபுகளால் இக் குடும்பத்தாருக்கு அளிக்கப்பட்டது. மொகலாய வம்சத்தில் டில்லியில் ஒரு கிழ அரசர் இருந்தார். அவருக்கு வேண்டிய சில நன்மைகளுக்காக ராம் மோகனர்

உழைத்தார். அதனுல் அவரால் 'ராஜா' என்ற பட்டம் அளிக்கப் பெற்ருர்.

இளமைப் பருவத்தில் ராம் மோகனர் உழைத்து, வங்காளி, பாரசீகம், சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளைப் பயின்ருர். நல்ல புத்திகூர்மை உள்ளவராகையால், கொஞ்சம் வயதான போதிலும் ஆங்கில பாஷையைக் கற்றுத் தேர்ச்சிபெற்ருர். செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவராகையால், உத்தியோகம் தேட வேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை.

கணவரை இழந்த இந்துப் பெண்கள் உடன் கட்டை யேறும்கொடுமைகளை ராம் மோகனர் கண்டார். கணவனது பிணத்தோடு, உயிரோடிருக்கும் மனைவியையும் சேர்த்துக் கொளுத்தும் இவ் வழக்கம் ஒழிய வேண்டும் என்று அவர் மிகவும் பாடுபட்டார். இதனுல் வைதிகர் பகை அவருக்கு ஏற்பட்டது; குடும்பத்திலிருந்து பிரியவும் நேர்ந்தது. அவர் திபெத்து தேசம் வரையில் பிரயாணம் செய்து, பல இடங்களையும் சுற்றிப் பார்த்துத் திரும்பினர். இந்தியாவிலுள்ள பல நாடுகளையும் அவர் சுற்றிப் பார்த்தார்.

ராம் மோகனர் தெய்வத்தின் உண்மையைத் தெரிவிக்கும் பல மதநூல்களையும் நன்ருய்ப் பயின்ருர்; விக்கிரகங்கள் இல்லாமல் 'பிரமம்' என்ற பரம்பொருளைத் தியானிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்; அந்த எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு சம்ஸ்கிருத வேத புத்தகங்களை நன்ருக ஆராய்ந்தார்.

இப்பெரியவரது கல்வித்திறமையும், அறிவு நுட்பமும் எந்த வழியிற் புகுந்தாலும் புதுமுறைகளையே

தேடின. இக் காலத்தில் அவருக்கு ஓர் உத்தியோகமும் கிடைத்தது. சிறப்புடன் சில வருஷங்கள் உத்தியோகம் பார்த்தபிறகு, அவர் தாமே விலகிக்கொண்டார்; பொருள் சேர்த்துச் சீமானக வாழ்ந்தார். அப்பால், பெற்ருேருடைய செல்வமும் அவருக்குக் கிடைத்தது.

உத்தியோக பதவியைவிட்டு நீங்கிய பிறகு, அவர் தேசத்துக்காக உழைத்தார்; ராஜப் பிரதிநிதியாய் இருந்த பெண்டிங்க் பிரபுவிடம் தம் கருத்துக்களை நன்கு விளக்கி, உடன்கட்டையேறும் கொடிய வழக்கத்தை அடியோடு நீக்கினர்; தமது புதிய கொள்கைகளை ஆதாரமாகக்கொண்ட பிரம்ம சமாஜம் என்ற புதிய சபையை ஆரம்பித்தார். 'பிரமம் என்ற கடவுளுக்கு உருவம் இல்லை; விக்கிரங்களையும், படங்களையும் வணங்குவது சரியன்று' என்பவை இச் சபையின் கொள்கைகளில் முக்கியமானவை.

வங்காள வாசிகளில் அநேகர், அவர் கொள்கைகளில் நம்பிக்கைகொண்டு இச் சபையில் சேர்ந்தனர். ரவீந்திரநாத் தாகூரின் தகப்பனராகிய தேவேந்திரநாத் தாகூர் இந்தச் சபையில் சேர்ந்து உழைத்தார்.

ராம் மோகனர் கிழப்பருவத்தில் மொகலாய அரசருக்காக இங்கிலாந்தில் அரசாங்கத்தாருடன் பேசப் போனர். அவர் இந்தியாவின் அரசாங்க நிலையைப் பற்றியும் பலரோடு பேசினர்; மத விஷயங்களைப்பற்றியும் பேசினர். மிகுந்த உழைப்பாலும், முதுமையாலும் இங்கிலாந்திலேயே இறந்துபோனர். அவர் நமது தேசத்தாருக்குச் செய்துள்ள நன்மைகளுக்காக அவரைப் போற்றுவது நமது கடமை.

பதவி	சீமான்	கருத்துக்கள்	அறிவு நுட்பம்
பிரம்மம்	வங்காளி	விக்கிரகம்	சுற்றிப்பார்த்து
நவாபு	முதுமை	உடன்கட்டை	அவசியம் இல்லை
வைதிகர்	புதுமுறை	கொளுத்தும்	பிரம்மசமாஜம்

அரும்பதவுரை : விக்கிரகம் - சிலை. நுட்பம் - கூர்மை. சீமான் - பணக்காரர். முதுமை - கிழத்தனம். (முதுமை × இளமை.)

பயிற்சி

I. பின்வரும் பெயர்ச்சொற்களில் ஒவ்வொன்றும் இன்ன வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிடு.

சாலை, பொறுமை, வேகம், கிளி, மயில், சுறுசுறுப்பு, வயல், பலம், தோலா, வெளிச்சம், நாய், எலி, இருட்டு, அடக்கம், தோட்டம், பொறுமை, இவைகள், எவன், உழக்கு, யாவை, நடை, உறக்கம், பேசுதல், உழவு, அவுன்ஸ், ஓட்டம், சோம்பல், இனிமை, மைல், பூ, வருஷம், சித்திரை, ஏப்ரல், மஞ்சள், சிவப்பு, நகம், கால், முகம், இதழ்.

II. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றையும், இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

(1) இவரது முன்னோர் நவாபுகளிடம் உத்தியோகம் செய்து, பெரும் பொருள் தேடியிருந்தார்கள்.

(2) செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவராகையால், உத்தியோகம் தேடவேண்டும் என்ற அவசியம் அவருக்கு இல்லை.

(3) வங்காள வாசிகளில் அநேகர் பிரம்ம சமாஜத்தில் நம்பிக்கைகொண்டு அதில் சேர்ந்தனர்.

கேள்விகள்

1. ராம் மோகனர் 'ராஜா' என்ற பட்டம் பெற்றது எவ்வாறு ?

2. அவர் ஏற்படுத்திய மதம் யாது? அதன் கொள்கைகள் எவை?
3. பெண்களின் நன்மைக்காக அவர் செய்த சீர்திருத்தம் என்ன?
4. 'ராய்' என்ற பட்டம் யாரால் அளிக்கப்பட்டது?

14. ஆமையும் முயலும்

ஒரு முயல் காட்டில் போய்க்கொண்டிருக்கும் போது ஆமை ஒன்றைச் சந்தித்தது. முயல் குதித்துக் குதித்து வேகமாகச்செல்லும் சுபாவமுடையது. ஆமை மெதுவாக நகர்வது. ஆமையின் நடையைப்பார்த்து முயல் நகைத்து, "ஐயா, நீர் மிகவும் வேகமாய் நடக்கின்றீர்; நான் உம்மோடு ஓடிப்பார்க்க நினைக்கிறேன்; வருகிறீரா?" என்று கேட்டது. ஆமை முயலின் கர்வத்தை அறிந்துகொண்டு, "அதற்கென்ன! அப்படியே செய்யலாம்," என்றது.

அதன் பிறகு முயல், "ஐயா ஆமையாரே, நாம் இருவரும் நாளையதினம் காலையில், இந்த இடத்திலிருந்து புறப்பட்டு, சற்று தூரத்திலிருக்கும் ஒற்றைப் பனைமரத்திற்கு ஓடவேண்டும். அந்த இடத்திற்கு நம்மில் எவர் முன்னே ஓடுகிறாரோ, அவரே வென்றவர்," என்று சொல்லிற்று.

அதைக்கேட்ட ஆமை முயலை நோக்கி, "ஐயா, நீர் சொல்வது உண்மைதான். நம் வெற்றியையும், தோல்வியையும் தெரிந்து சொல்வதற்கு ஒருவர் வேண்டாவா? அதற்கு யாரை ஏற்படுத்துவது?" என்று கேட்டது. அப்போது முயல் அதற்கு ஒன்றும் சொல்ல முடியாமல் விழித்துக்கொண்டு நின்றது.

அந்தச் சமயத்தில் ஒரு குரங்கு தற்செயலாக அங்கே வந்தது. அதைக் கண்டவுடனே, முயலுக்கு அதிக மகிழ்ச்சி உண்டாயிற்று. அது குரங்கைப் பார்த்து, "நண்பரே, நல்ல சமயத்தில் நீர் இங்கு வந்து சேர்ந்தீர்! நாங்கள் இந்த இடத்திலிருந்து அந்

தப் பனைமரம் வரையில் ஓடுவதற்குத் தீர்மானித்திருக்கிறோம். நீர் எங்களுக்கு மத்தியஸ்தராக இருக்கவேண்டும்," என்று கேட்க, குரங்கும் அதற்கு உடன்பட்டது.

மறுநாள் காலையில் ஆமையும், முயலும் குறித்த இடத்திலிருந்து புறப்பட்டன. அதற்கு முன்னமே குரங்கு பனை மரத்தடியில் போயிருந்தது. "ஊர்ந்துநகரும் ஆமையா நம்மை வெல்லும்! அது அங்குவர ஒருநாள் செல்லும்; அதற்குள் நாம் எத்தனையோ முறை ஓடித்திரும்பலாம்," என்று கர்வம் கொண்டு முயல் ஓட ஆரம்பித்தது. பாதி தூரத்திற்குமேல் ஓடி

அது திரும்பிப்பார்த்தது. ஆமை அதன் கண்களுக்குப் புலப்படவே இல்லை. "இன்னும் ஒரு நொடியில் குறித்த இடத்தைச் சேர்ந்துவிடலாம். ஆகையால், ஆமைவரும் வரையில் இவ்விடத்தில் சிறிது இளைப்பாறலாம்," என்று எண்ணி, அங்கிருந்த ஒரு மரத்தடியில் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டது.

ஆமை ஒரே நடையாய் வந்து, வழியில் ஆலமர நிழலில் முயல் உறங்குவதைக் கண்டது; விடாமுயற்சியுடன் முன்போலவே, அது நகர்ந்து போய்க் குறித்த இடத்தை அடைந்தது.

சிறிது நேரம் கழிந்த பிறகு, முயல் தூக்கம் தெளிந்து ஓடத் தொடங்கிற்று; தான் வென்றதாக நினைத்துக் குறித்த இடத்தைச் சேர்ந்தபோது, அங்கு ஆமை இருக்கக் கண்டது. கர்வம் ஒழிந்து வெட்கித் தலை குனிந்தது.

அப்போது குரங்கு, முயலைப் பார்த்து, "நண்பரே, நீர் உம்மைவிட ஓடக்கூடியவர் ஒருவரும் இல்லை என்று நினைத்துக் கர்வம் கொண்டீர்; அதனால் நீர் தோற்றீர். ஆமை அவ்வாறு நினைக்கவில்லை; விடாமுயற்சியைக் கைக்கொண்டு வெற்றி அடைந்தது. ஆகையால், 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்,' என்பதைத் தெரிந்து கொள்ளும்," என்று சொல்லிற்று. முயல் ஒன்றும் பேச வழியில்லாமல் தலை குனிந்தவாறு சென்றது.

'விடா முயற்சி வெற்றி தரும்.'

வெற்றி	உறங்கி	சுபாவம்	உடன்பட்டு
தோல்வி	வெட்கி	சந்தித்தது	விடாமுயற்சி
ஒற்றை	அயர்ந்து	உடன்பட்டது	ஒரே நடையில்
குறித்த	கர்வத்தை	தற்செயலாக	விழித்துக்கொண்டு
ஊர்ந்து	நகைத்து	மத்தியஸ்தர்	தீர்மானித்திருக்கின்றோம்

அரும்பதவுரை: சந்தித்தது - எதிரில் கண்டது. சுபாவம் - தன்மை. நகைத்து - சிரித்து. உடன்பட்டது - சம்மதித்தது. தீர்மானம் - முடிவு. தீர்மானித்து - முடிவுசெய்து. தற்செயல் - தானுக நிகழ்வது. மத்தியஸ்தர் - நியாயம் சொல்லும் பொது மனிதர்.

பயிற்சி

I. கண்ணுடி, சிங்கம், கண்ணகி, வாழை, தீ, கண்ணன், பெண்கள், பையன்கள், ஊரார், மரங்கள், கற்கள் இப்பெயர்ச்சொற்களைக் கவனி.

கண்ணன் என்றசொல் மனிதர் இனத்தில் ஒரு ஆணைக் குறிக்கின்றது. **கண்ணகி** என்ற சொல் மனிதர் இனத்தில் ஒரு பெண்ணைக் குறிக்கிறது. **பெண்கள்** என்ற சொல் பல பெண்களையும், **பையன்கள்** என்ற சொல் பல பையன்களையும், **ஊரார்** என்பது ஆண்களும், பெண்களும் கலந்த பலரையும் குறிக்கின்றன.

மனிதர் பெயரையும், தேவர் பெயரையும் குறிக்கும் சொற்கள் **உயர்திணை** என்று சொல்லப்படும். உயர்திணையில் ஒரு ஆணைக்குறிக்கும் சொல் **ஆண்பால்** எனப்படும்; ஒரு பெண்ணைக்குறிக்கும் சொல் **பெண்பால்** எனப்படும்; பலரைக் குறிக்கும் சொல் **பலர்பால்** எனப்படும்.

பின் வரும் வாக்கியங்களிலுள்ள உயர்திணைப்பெயர்ச் சொற்கள் எவை ? ஒவ்வொன்றும் எந்தப் பாலைச் சேர்ந்தது ?

(1) கந்தன் ஆடு மேய்க்கிருன்.

(2) சுந்தரி பாட்டுப் பாடுகிருள்.

(3) இவர்கள் நூல் நூற்கிருர்கள்.

(4) ஆண்களும் பெண்களும் படிக்கவேண்டும்.

II. பின்வரும் அப்பியாசங்களில் உள்ள இரண்டு வாக்கியங்களை ஒன்ருகச் சேர்த்து எழுதுக.

(1) நீ மிகவும் வேகமாக நடக்கிறாய். நான் உன்னோடு வரமுடியாது.

(2) வெற்றியையும் தோல்வியையும் ஒருவர் தெரிந்து சொல்லவேண்டும். அதற்கு யாரை ஏற்படுத்துவது ?

(3) முயல் கர்வங்கொண்டு தூங்கிற்று. அதனால் அது தோற்றுப்போயிற்று.

கேள்விகள்

1. முயல் ஆமையைப் பார்த்து ஏன் நகைத்தது?
2. முயல் தோற்றதற்குக் காரணம் என்ன ?
3. கடைசியில் குரங்கு முயலுக்கு என்ன புத்தி சொல்லிற்று.
4. இக்கதையினால் விளங்கும் நீதி என்ன ?

---

15. காற்று

காற்று என்பது நம் கண்களுக்குத் தெரியும் பொருள் அன்று. ஆகையால், நீங்கள் அதை ஒருபோதும் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால், அது நம்மைச் சுற்றிலும் நிறைந்து இருக்கிறது.

ஒரு பாத்திரத்தை எடுத்துத் தலைகீழாகத் தண்ணீரில் அமிழ்த்துங்கள். என்ன ஆகிறது? பாத்திரத்தில் தண்ணீர் முழுவதும் நுழைவதில்லை. காரணம் என்ன ? பாத்திரத்தில் காற்று இருக்கிறது; ஆகையால் அது தண்ணீர் உள்ளே செல்ல இடம் கொடுக்கவில்லை. அதே பாத்திரத்தைச் சிறிது சாய்த்துப் பிடியுங்கள். என்ன ஆகிறது? பாத்திரத்தில் தண்ணீர் நுழைகிறது. காரணம் என்ன ? பாத்திரத்திற்குள் இருக்கும் காற்று வெளியே வருகிறது. ஆகையால், தண்ணீர் உள்ளே புக இடம் ஏற்படுகின்றது.

ஒரு மரத்தைக் கவனித்துப் பாருங்கள். அதன் கிளைகளும், இலைகளும் அசைகின்றன. அவை அசையும்போது சில சமயங்களில் சத்தமும் கேட்கிறது. ஏன் ? காற்று வீசுவதாலேதான் அவை அசைகின்றன; சத்தமும் உண்டாகின்றது. இன்னும் காற்று வீசும்போது நம் உடம்பில் படுவதை உணருகிறோம். விசிறியால் விசிறும்போதும் காற்று நம்மேல் படுவதை அறிகிறோம். ஆகையால், காற்று என்று ஒரு பொருள் கண்ணுக்குப் புலப்படாவிட்டாலும், அஃது இருக்கிறதென்பதை நாம் உணரலாம்.

நாம் வசிக்கும் இந்தப் பூமியின்மேல் எங்கும் காற்று நிறைந்து இருக்கிறது. ஆகாரம் இல்லாமல் நாம் பல நாட்கள் வரையில் உயிருடன் இருக்கலாம். காற்று இல்லாவிட்டால் நாம் சில நிமிஷங்கூடப் பிழைத்திருக்க முடியாது. ஆகையால், கடவுள் காற்றை உலக முழுவதும் நிரப்பியிருக்கிறார். காற்று இல்லாத இடமே இல்லை.

நாம் காற்றினால் சீவிப்பது எப்படி ? நாம் காற்றை அடிக்கடி உள்ளே இழுக்கிறோம்; வெளியே விடுகிறோம். உள்ளே இழுக்கும்போது காற்றுச் சுவாசப் பைக்குட்சென்று இரத்தத்தைச் சுத்தப்படுத்துகின்றது. அதனால் நமக்கு உற்சாகமும் சுகமும் ஏற்படுகின்றன.

சிறிது நேரம் நாம் மூச்சை உள்ளே இழுக்காதிருந்தால், எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது ! இப்படி நெடுநேரம் வரையில் நாம் மூச்சை உட்கொள்ளாதிருந்தால், நிச்சயமாக இறந்து போவோம். உள்ளே சென்ற காற்று, இரத்தத்தைச் சுத்தி செய்வதால், அசுத்தமடைந்து வெளியே வருகிறது.

நாம் உட்கொள்ளும் காற்றுச் சுத்தமாய் இருக்க வேண்டும். அழுக்கு குப்பை, மலம் முதலியவைகளி லிருந்து வரும் காற்று அசுத்தமானது. அசுத்தமான காற்றைச் சுவாசித்தால், நமக்குப் பல விதமான நோய் கள் உண்டாகும். ஆகையால், நாம் வசிக்கும் வீடு களில் சுத்தமான காற்றுப் பரவ ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

மனிதர் முதலிய பிராணிகள் மூச்சு விடுவதனுலும், பல அசுத்தப் பொருள்களினுலும் காற்று அசுத்தமாகி விடுகிறது. இந்த அசுத்தக் காற்றிலுள்ள அசுத்தத்தை மரம், செடி, கொடிகள் சூரிய வெளிச்சத்தின் உதவி யால், வேறு பிரித்து ஆகாரமாக உட்கொண்டு, காற் றைச் சுத்தப் படுத்துகின்றன.

காற்று மனிதருக்குமாத்திரமன்றி, மிருகம், பறவை முதலிய பிராணிகளுக்கும், செடி கொடி முதலியவற் றிற்கும் இன்றியமையாதது. காற்று இல்லாவிட்டால், எல்லாம் அழிந்துபோம். காற்றின் உதவியால் படகு கள் ஓடுகின்றன; காற்றினுல் சில இயந்திரங்கள் வேலை செய்கின்றன. ஆகையால், உலகமே காற்றினுல் நடை பெறுகிறது என்று சொல்லலாம்.

புக	நிரப்பு	புலப்படும்
படகு	சுவாசப்பை	உட்கொள்ளும்
அஃது	நிச்சயமாக	அழிந்து போம்
மூச்சு	சுத்தப்படுத்து	இன்றியமையாதது

அரும்பதவுரை: புக - நுழைய, செல்ல. இன்றியமை யாதது - இல்லாமல் முடியாதது, அவசியமானது. சுவாசம்- மூச்சு. நிச்சயமாக - உறுதியாக. (சுத்தம் × அசுத்தம். பிரித்து × சேர்த்து. நிறைந்து × குறைந்து.)

பயிற்சி

I (1) சிங்கம், வாழை, தீ இப்பெயர்ச் சொற்களைக் கவனி. இவைகள் மனிதர் அல்லாத பொருள்களில் ஒன்றைக் குறிக்கின்றன. மரங்கள், பசுக்கள் என்ற பெயர்ச் சொற்கள் மனிதர் அல்லாத பொருள்களில் பலவற்றைக் குறிக்கின்றன.

மனிதர் அல்லாத மற்ற எல்லா உயிருள்ள பொருள்களும், உயிரில்லாத பொருள்களும் அஃறிணை என்று சொல்லப்படும் (அஃறிணை=உயர்வு அல்லாத திணை. திணை=சாதி, வகுப்பு.) அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும்; பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும்.

(2) பின்வரும் வாக்கியங்களில் அஃறிணைப் பெயர்களை எடுத்துக்கூறு. ஒவ்வொன்றும் எந்தப் பாலைச் சேர்ந்தது ?

(1) ஓநாய் ஆடுகளைக் கொல்லும்.
(2) முருகன் புறாக்களை வளர்க்கிறான்.
(3) பாம்பு சீறுகிறது.
(4) மரத்தில் இலைகளைப் பார்.

II. காற்றைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

III. சுத்தப்படுத்து, உட்கொள், நிரப்பி, நிரப்பு, சுற்றிலும், சுற்று, பிராணி, பிராணன்—இவ் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

கேள்விகள்

1. காற்று இருக்கிறதை நாம் எப்படி உணருகிறோம் ?
2. சுவாசிப்பது என்றால் என்ன ?

3. நாம் எப்படிப்பட்ட காற்றை உட்கொள்ள வேண்டும்?
4. நாம் உட்கொள்ளும் காற்று உடலுக்குள் சென்று என்ன வேலை செய்கிறது?
5. மரம், செடி, கொடிகள் நமக்குச் செய்யும் நன்மை என்ன?

16. இரந்தி தேவர்

வெகு காலத்திற்கு முன்னே இரந்தி தேவர் என்ற ஓர் அரசரிருந்தார். அவருடைய நாட்டில் கொஞ்ச காலம் மழை பெய்யாமல் போனதால், பஞ்சம் உண் டாகத் தலைப்பட்டது. அது கண்ட இரந்தி தேவர் மிகவும் மனம் நொந்து, "நாட்டின் பஞ்சம் தீர என்ன செய்யலாம்!" என்று யோசித்தார்; காட்டிற்குச் சென்று நாற்பது நாள் வரையிலும் மிகவும் கடுமையான ஒரு நோன்பு நோற்ருல், தம் நாட்டிலுள்ள பஞ்சம் தீரு மென அறிந்து கொண்டார்.

அங்ஙனமே, அவர் நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்று, நாற்பது நாளளவும் உணவின்றி, அந்நோன்பை நோற்றனர்; நாற்பத்தொன்ரும் நாள் தாம் சாப்பிடுவதற் கென்று வைத்திருந்த சொற்ப உணவை உண்ண உட்கார்ந்தார். அப்



போது ஓர் ஏழை மனிதன் அங்கே வந்து, தன் பசி

யைத் தணித்துக் கொள்ளக்கையை நீட்டினுன். இரந்தி தேவர் தம்முடைய உணவில் ஒரு பாகத்தை எடுத்து அவனுக்குக் கொடுத்தார். அவன் அதை உண்டு மகிழ்ந்து, அவரை வாழ்த்திச் சென்ருன்.

அப்புறம் ஒரு பிராமணனும், அவனுடைய மகனும் அங்கு வந்து, தாங்கள் மிகவும் பசியால் வருந்துவதாகச் சொன்ஞர்கள். இரந்தி தேவர் பின்னும் தம் உணவிலிருந்து சிறிது பாகத்தை எடுத்து அவ்விருவருக்கும் கொடுத்தார். அவ் விருவரும் அதை வாங்கிப் புசித்து அவ்விடம் விட்டு அகன்றனர்.



பின்னர் அவ்வழியாக ஒரு வேடன் தன் நாய்களுடன் வந்து இரந்தி தேவரைப் பார்த்து, "ஐயா, நான் கடும் பசியோடு இருக்கிறேன்; என் நாய்களுக்கும் உணவில்லை; ஏதாவது கொடுக்கமாட்டீரா?" என்று கேட்டான்.

அப்போது இரந்தி தேவர் தம்மிடம் மிஞ்சியிருந்த உணவை எல்லாம் அவனுக்கும், அவன் நாய்களுக்கும்

கொடுத்துவிட்டார். அந்த உணவு அவனுக்கும், அவன் நாய்களுக்கும் போதாமலிருந்ததென்றாலும், அவன் திருப்தியுற்ற பார்வையோடு இரந்தி தேவருக்கு நன்றி பாராட்டி அங்கிருந்து போய்விட்டான்.

இரந்தி தேவர் பசியால் மிகவும் வருந்தினர். அங்கு ஒரு பாத்திரத்தில் இருந்த தண்ணீர் தான் அவருக்கு உணவாகக் கூடியதாயிருந்தது. அதை யாவது அருந்தலாமென்று மிக்க ஆவலோடு அதைக் கையிலெடுத்தார். அப்

போது முதிர்ந்த வயதுள்ள ஒரு கிழவன் அங்கு வந்து, கைகளை நீட்டி தண்ணீர் என்று கெஞ்சினன். இரந்தி தேவர் தாம் கையிலெடுத்த பாத்திரத்தை அவனுக்குக் கொடுத்தார்; அவன் மிக ஆவலோடு பருகுவதைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது இரந்தி தேவருக்குக் கொஞ்சமும் பசி தோன்றவில்லை. அவர் அங்கிருந்து புறப்பட்டுத் தம் நாடு சேர்ந்தார். அவர் நாட்டினுள் பிரவேசித்ததும் மழை ஏராளமாய்ப் பெய்தது; நாடு செழித்தது.

தன் நலம் கருதாது பிறர் நலம் கருதும் இத்தகைய புண்ணிய சீலர்களே 'பெரியார்' எனக் கொண்டாடப் படுவார்கள். அவர்கள் எண்ணிய காரியம் எளிதில் முடியும்.

நோன்பு	நோற்றூர்	அருந்தலாம்	அகன்றனர்
பஞ்சம்	போதாமல்	நாளளவும்	மனம் நொந்து
திருப்தி	கடும்பசி	பிறர் நலம்	நன்றி பாராட்டி
பார்வை	ஏராளமாய்	மிஞ்சியிருந்த	தணித்துக்கொண்டு

அரும்பதவுரை: நன்றி - உதவி. திருப்தி - மன நிறைவு. அருந்தலாம் - குடிக்கலாம், உண்ணலாம். மனம் நொந்து - மனம் வருந்தி. (பிறர் நலம் × தன்னலம்.)

பயிற்சி

I. (1) உயர்திணைப் பெயர்கள் ஐந்து சொல்லு; அஃறிணைப் பெயர்கள் ஐந்து சொல்லு.

(2) பின்வரும் பெயர்ச்சொற்கள் எந்தெந்தப் பாலைக் குறிக்கின்றன? பழங்கள், மீன், பாறை, மண், வணிகன், உழவர்கள், பெண்கள், சிறுவர்கள், குருவி, கோழிகள்.

II. இப்பாடத்திலுள்ள ஒவ்வொரு படத்திலும் நீ உற்று நோக்கும் விஷயங்களைச் சிறு வாக்கியங்களில் கூறு.

III. மனம் நொந்தார், மனம் மகிழ்ந்தார், நோன்பு நோற்றூர்—என்று முடியும்படி முறையே ஒவ்வொரு வாக்கியம் எழுது.

VI. பெரியார், திருப்தி, வருந்தி, சுத்தம், நிறைந்து—இவற்றிற்கு எதிர்ப்பதம் கூறு.

கேள்விகள்

1. இரந்தி தேவர் என்பவர் யார்? ஒரு சமயம் அவருடைய நாட்டில் என்ன கஷ்டம் உண்டாயிற்று? அதற்காக அவர் என்ன செய்தார்?
2. அவர் தன்னலம் கருதாதவர் என்பதை விளக்கிக் காட்டு.



17. கூட்டுறவு

ஒருவனாக இருந்து தன்னிடம் உள்ள முதலைக் கொண்டு ஒழுங்காக வியாபாரம் செய்து, நல்ல லாபம் தேடலாம். ஆனால் இவ்வாறு வியாபாரம் செய்வதற்கு எல்லாரும் முதல் பணம் நிறைய உடையவர்களாய் இருக்க முடியாதல்லவா? பத்துப்பேர் சேர்ந்து ஆளுக்குச் சொல்ப முதல் போட்டாலும், அந்தப் பணம் பெரிய முதலாகி வியாபாரம் நன்றாய்ச் செய்வதற்கு ஏதுவாகுமல்லவா?

கிராமங்களில் உள்ள குடியானவர்கள் விதைகள் வாங்கவும், கால்நடைகள் வாங்கவும், வேறு செலவுகளுக்கும் அடிக்கடி கடன் வாங்குகிறார்கள். கடன் கொடுப்பவர் தம் பணத்துக்குத் தக்க ஈடு கிடைத்தால் தான் கொடுப்பார்கள். ஆகையால் குடியானவன் நிலத்தையோ, வீட்டையோ, மாடுகளையோ ஈடு வைத்துத் தான் கடன் வாங்கவேண்டும்.

நன்ருய் விளைந்தால் நான்கு ஐந்து வருஷங்களில் கடனைத் தீர்த்துவிடலாம். விளைவு குறைவானுலும், செலவு அதிகமானுலும் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது. பணம் கொடுத்தவன் ஈடாக வைத்த வீட்டையும், மாட்டையும், தோட்டத்தையும் கைப்பற்றிக் கொள்வான். நிலத்தையே நம்பி வாழ்ந்த குடியானவன் கஷ்டப்படுவான்.

ஒருவன் தன் நிலத்துக்கு வேண்டிய அளவு விதை வாங்க, அதற்குத் தக்க விலை கொடுக்கவேண்டும். கிராமத்தார் எல்லாரும் ஒன்ருய்ச் சேர்ந்து, தங்களுக்கு வேண்டிய விதைகளை மொத்தமாக வாங்கினுல், அந்த விலையினும் மிகவும் குறைவான விலை கொடுத்து வாங்கி லாபம் அடையலாம்.

ஒருவன் தன் பூமியில் விளைந்த பத்து மூட்டைக் கடலையை விற்கப்போனுல், மிகவும் குறைந்த விலைக்கு விற்க நேரிடும். கிராமத்தார் எல்லோரும் சேர்ந்து ஊரில் விளைந்த எல்லாக் கடலையையும் சேர்த்துப்போட்டு விற்ருல், அதிக லாபம் பெறலாம்; வண்டிச் சத்தம் முதலிய செலவுகளும் குறையும்.

கோழிகளையும், புருக்களையும் வளர்த்து முட்டை எடுப்பவர் ஒன்ருய்ச் சேர்த்து விற்ருல், முட்டையின் விலை ஒரே விலையாய் இருக்கும். துணி, சமுக்காளம், துப்பட்டி இவற்றை நெய்பவன் தான் தனியே விற்கப் போனுல், உழைத்த கூலிகூடப் பெருமல் திரும்ப நேரிட்டாலும் நேரிடும். அவனே பலரோடு சேர்ந்து விற்ருல், வாங்குவோர் சொன்ன விலை கொடுத்து வாங்கி விடுவார்கள்.

சிறுசிறு நிலம் உள்ள பத்து இருபதுபேர் ஒன்று சேர்ந்து, பெரிய கிணறு வெட்டுதல் எளிதாகும். அந்தக் கிணற்றில் நீர் இறைக்கும் எந்திரமும் வைக்க லாம். ஆனால் ஒருவன் தனியாய் அப்படிச் செய்து லாபம் பெற முடியாது. இப்படியே தரிசாகவுள்ள நிலங் களையும் பலர்கூடிப் பண்படுத்திப் பயிரிடலாம். இவ் வாறு, பலர் கூடிச் செய்யும் காரியத்திற்குக் கூட்டுறவு முறை என்று பெயர்.

இக்கூட்டுறவு முறையில் சங்கங்கள் ஏற்படுத்தி மேற்கூறிய காரியங்களை யெல்லாம் ஜனங்கள் தாங்களே செய்து கொள்வதற்கு அரசாங்கத்தார் உதவி செய்து வருகிறார்கள். இவ்வாறு ஏற்படுத்தப்படும் சங்கம் கூட் டுறவுச் சங்கம் எனப்படும். கூட்டுறவுச் சங்கம் ஏற் பட்டால், குடியானவர்கள் கடன் படுவதில் ஒழுங்கு ஏற்படும். நிலங்களை இழக்கும் நிலமை வராது. ஊரில் உள்ள பத்துப் பெரிய மனிதர் சங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிதி சேர்க்க வேண்டும். ஊரார் எல்லா ரும் அச் சங்கத்தில் பங்கு எடுத்துக் கொண்டு ஒன்று சேர, நிலத்தை ஈடு காட்டிச் சில வருஷங்களில் கொஞ் சங் கொஞ்சமாகக் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக ஒப் பந்தம் செய்துகொண்டு கடன் வாங்கலாம்.

வாங்கின கடனை நாம் எப்படியும் திருப்பிக் கொடுத் தாக வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள் இந்தச் சங்கங்களிற் சேர்ந்தால், ஊரார் நாணயம் கெட்டுப் போகும். நாணயமும் நம்பிக்கையுமே கூட்டுறவுச் சங் கங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமானவை. வருஷத்துக் குப் பத்து ரூபா கொடுக்கக் கூடியவன் அதற்குத் தக்கபடிதான் கடன் வாங்கலாம். அளவும் கணக்

கும் இல்லாமல் கடன் வாங்கிவிட்டுக் கொடுக்கும்போது வருந்துவது கூடாது. இந்தச் சங்கங்களுக்கு அரசாங்கத்தார் உதவி, நாணயம் உள்ள வரையில்தான் கிடைக்கும். ஆகையால், நாணயமாகவும், சிக்கனமாகவும் வாழ்ந்து கடன் பாரத்தைக்கொஞ்சம் கொஞ்சமாகக் கழித்து, லாபமுள்ள வழிகளில் உழைத்துப் பயன்பெறலாம்.

நிதி	நேரிடும்	அடிக்கடி	இடுவைத்து
கூலி	பொறுப்பு	மொத்தமாக	நாணயமாக
தரிசு	நிலைமை	சமுக்காளம்	சிக்கனமாக
சத்தம்	கூட்டுறவு	பண்படுத்தி	சொன்னவிலை
சங்கம்	ஒப்பந்தம்	கைப்பற்று	அரசாங்கத்தார்

அரும்பதவுரை : கூட்டுறவு - பலர் ஒன்றாகச் சேர்தல். ஈடு - அடமானம். தரிசு - பயிர் செய்யப்படாத நிலம். ஒப்பந்தம் - உடன்படிக்கை. நாணயமாக - உண்மையாக. (மொத்தமாக × சில்லறையாக.)

பயிற்சி

I. (1) உயர்திணைக்கு உரிய பால்கள் எவை? அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

(2) பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணையும், பாலும் கூறு.

பாலா, மணி அடி.

வேடன் பறவைகளைப் பிடிக்கிறான்.

ஓநாய் ஆட்டைக் கொன்றது.

தாய் பிள்ளைகளை வளர்க்கிறாள்.

II. பின் வரும் வாக்கியங்களைப் பூர்த்திசெய்.

(1) வெளியில் கடன் வாங்குவதால் குடியானவர்களுக்குப் பல ——— ———.

(2) கூட்டுறவுச் சங்கத்தால் குடியானவர்களுக்கு ——— ———.

(3) பத்துபேர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்வது ———.

(4) ஒருவராக ஒரு——— ——— ———.

III. தரிசு, சிக்கனம், ஒப்பந்தம், நாணயம், நிதி இச்சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க.

IV. லாபம், குறைந்த, மொத்தமாக, பெரியார், திருப்தி, சுத்தம், வருந்தி—இச்சொற்களுக்கு எதிர்ப்பதம் கூறுக.

கேள்விகள்

1. கூட்டுறவுச் சங்கத்தால் உண்டாகும் நன்மைகள் எவை ?
2. குடியானவர்கள் வெளியே கடன் வாங்குவதில் உள்ள கஷ்டம் என்ன ? கூட்டுறவுச் சங்கத்தில் கடன்வாங்குவதில் உள்ள சௌகரியம் என்ன ?
3. கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆதார மானவை எவை?
4. கூட்டுறவுச் சங்கத்தார் எவ்வாறு உழைத்துப் பயன் பெறவேண்டும் ?

---

18. ஈஸ்வர சந்திர வித்தியாசாகரரும் வேலைக்காரனும்

கல்கத்தாவில் ஒரு பெரிய பண்டிதர் இருந்தார். அவர் பெயர் ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர். அவர் சம்ஸ் கிருத பாஷையிலே நிரம்பப் படித்தவர்; ஆங்கில பாஷையிலும் நல்ல தேர்ச்சி உடையவர். அவர் வங்

காள மாகாணத்திலுள்ள ஜனங்களைச் சீர்திருத்த மிகவும் பாடுபட்ட பெரியார். அந்த மகானைக் குறித்துப் பல கதைகள் உள்ளன. அவற்றில் ஒரு கதை இது.

ஒரு சமயம் ஈஸ்வர சந்திரர் ஒரு பெருஞ்செல்வருடைய வீட்டிலே தங்கியிருந்தார். அவர் அங்கே

இருந்தபோது, ஒருநாள் வீட்டுக் கூடத்தில் ஓர் இரத்தின கம்பளத்திலே உட்கார்ந்து, தம்முடைய நண்பர்களுடன் பேசிக்கொண் டிருந்தார். மேலே பங்காவினால் நல்ல காற்று வீசிக்கொண்டிருந்தது.

அப்போது ஒரு பிராமண வேலைக்காரன் அவருக்கு ஒரு கடிதம் கொண்டுவந்தான். அவன் வெய்யிலிலே வெகுதூரம் மிக விரைவாக நடந்து வந்தான். ஆகையால், அவனுடைய முகம் செக்கச்செவேலென்று இருந்தது. அவனுடைய முகத்திலிருந்து வேர்வை முத்து

முத்தாக வடிந்துகொண்டிருந்தது. அவன் மார்பு வீங்கப் பெருமூச்சு விட்டான்.

அவன் பங்காவின் கீழ் இருந்த ஈஸ்வர சந்திரரைக் கண்டு, அவரிடம் அந்த கடிதத்தைக் கொடுத்தான். அவர் கடிதத்தை வாங்கிக்கொண்டு, அவனை ஒரு முறை உற்றுப் பார்த்தார். உடனே அவர் கொஞ்சம் விலகி நின்ற அவனுடைய கையைப்பிடித்து இழுத்துத் தாம் உட்கார்ந்திருந்த இடத்திலே உட்கார வைத்தார். அவன் அங்கே பங்காக் காற்று வீச இளைப்பாறிக் கொண் டிருந்தான். அவர் கடிதத்தைப் படித்துப் பார்த்து, அதற்குப் பதில் எழுதினர். அவர் விடை எழுதி முடிந்ததும் அதை அவனிடம் கொடுத்தார்; அதனேடு அவனுக்கு வழிச்செலவுக்காகக் கொஞ்சம் பணமும் கொடுத்து அனுப்பினர். அந்த மனிதன் பதில் கடிதம் வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

உடனே, அங்கு இருந்த சிநேகிதர்கள் ஈஸ்வர சந்திரரைப்பார்த்து, "ஏன் ஐயா, நீர் அவனை எங்களுக்குச் சமமாக உட்கார வைத்தீர். அவன் ஒரு வேலைக்காரன் என்பதை நீர் மறந்து போனீரா? எங்களை இப்படி அவமானம் பண்ணலாமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு ஈஸ்வர சந்திரர் மிக்க பொறுமையோடு கீழ்வருமாறு பதில் சொன்னர்:

"என் நண்பர்களே, அவன் நம்மினும் எவ்விதத்தில் தாழ்ந்தவன்? அவன் ஏழையென்று நீங்கள் சொல்லலாம். அவனுக்குச் சம்பளம் பத்து ரூபாய்தான். குறைந்த சம்பளம் என்பதனுலேயே அவன் இழிந்தவன் ஆவானே? என் தகப்பனரும் மிக்க குறைந்த சம்பளம்

வாங்கிக் காலம் கழித்தார். அவனைப் பார்த்தபோது, எனக்கு என் தகப்பனார் நினைவு வந்தது. களைத்து வந்த அவன் முகத்தைக் காண என் மனம் உருகிவிட்டது. நான் அவனுக்கு உபகாரம் செய்தேன். இது நியாய மல்லவா? அவன் என்னைவிட எவ்விதத்திலும் தாழ்ந்த வன் அல்லன் என்பது என் எண்ணம்," என்றார்.

அவருடைய நண்பர்கள் ஒன்றும் பேச முடியாமல், அவருடைய பெருந்தன்மையைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

விலகி	வேலைக்காரன்	பெருமூச்சு	பொறுமையோடு
பங்கா	வீட்டுக் கூடம்	பெருஞ்செல்வர்	வித்தியாசாகரர்
சமமாக	விடை எழுதி	மார்பு வீங்க	தாழ்ந்தவன் அல்லன்
சிநேகிதர்	மனம் உருகி	பெருந்தன்மை	இழிந்தவன் ஆவானோ
வேர்வை	பதில் கடிதம்	கீழ்வருமாறு	அவமானம்பண்ணலாமா
சீர்திருத்தம்	வழிச் செலவு	சேக்கச் சேவேல்	இரத்தின கம்பளம்

அரும்பதவுரை: வித்தியாசாகரர் - கல்விக் கடல், நல்ல படிப்பாளி. சீர்திருத்த - ஒழுங்குபடுத்த. சிநேகிதர் - நண்பர். அவமானம் - இழிவு, மானக்கேடு. இரத்தின கம்பளம் - உயர்ந்த சித்திரக் கம்பளம்.

பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களிலுள்ள கருத்து முடியும் வினைச்சொற்களை எடுத்துக் கூறு.

(1) புலிகள் காட்டில் வாழ்கின்றன.

(2) குருவி கூடு கட்டுகிறது.

(3) மனிதர்கள் வேலை செய்கிறார்கள்.

(4) கந்தன் காற்றாடி விடுகிறான்.

(5) நாங்கள் கோவிலுக்குப் போகிறோம்.

(6) நான் பாடம் படிக்கிறேன்.

(7) தங்கை விளையாடுகிறாள்.

இவ்விதம் கருத்து முடியும் வினைச்சொல்லுக்கு வினை முற்று என்று பெயர்.

II. கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) ஈஸ்வர சந்திரர் ——— ——— மிகவும் பாடு பட்டார்.

(2) ——— ——— ———. முத்து முத்தாக வடிந்து கொண்டிருந்தது.

(3) அவ்வேலைக்காரனுடைய முகம் ——— இருந்தது.

(4) அவன் ——— ——— பெருமூச்சுவிட்டான்.

(5) ——— ——— ——— இழிந்தவன் ஆவானோ?

கேள்விகள்

1. ஈஸ்வர சந்திரர் எதற்காகப் பாடுபட்டார்?
2. வேலைக்காரனுடைய தோற்றம் எவ்வாறு இருந்தது?
3. வேலைக்காரனுடைய களைப்பை நீக்க அவர் என்ன செய்தார்?
4. அதுகண்ட அவருடைய சிநேகிதர்கள் அவரை என்ன கேட்டார்கள்?
5. அவர் தன் நண்பர்களுக்குக் கூறிய விடை என்ன?

---

19. நார்த்தொழில்

அற்பம் என்று ஒன்றையும் தள்ளிவிடக்கூடாது. வாழை, பனை, தென்னை, ஈந்து முதலிய மரங்கள் நார் உள்ளவை. புளிச்சை, சணல் என்ற செடிகளும் நார்

உள்ளவை. எருக்கம் செடியின் காய்க்குள் நார் உண்டு. இவற்றிலிருந்து பட்டுநூல் போன்ற மென்மையும், மழமழப்புமுள்ள நார் எடுப்பது உண்டு.

பருத்தி இழையை நூல் நூற்று நெய்வதும், பட்டுப்பூச்சி கொடுக்கும் இழைகளைத் திரித்து நூலாக்கி நெய்வதும் உங்களுக்குத் தெரியும். அப்படியே மெல்லிய இழைகளாக வாழைநாரை உரித்து எடுத்துப் பட்டுப்போல் ஆடை நெய்யலாம். எருக்கங் காயில் உள்ள நாரும் பட்டுப்போல் இருக்கும்.

வாழைப்பட்டையில் கிழித்த நாரைக்கொண்டு பூக்கள் தொடுக்கலாம்; மாலைகள் கட்டவும் உபயோகிக்கலாம். பூக்கடைகளில் குவிந்து கிடக்கும் பூக்களைப் பல



வித மாலைகளாகவும், குஞ்சங்களாகவும் கட்ட வாழை நாரே உதவுகிறது. இதனால் 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்று ஒரு பழமொழி உண்டு. நார் இல்லாதிருந்தால், பூ எப்படி மாலையாகும் என்று நாம் கேட்போம். நாருக்கு விலை அதிகம் இல்லை.

பூவுக்கு விலை அதிகம். நாரோடு சேர்ந்தபிறகே, பூவின் பெருமை அதிகமாகிறது.

தேங்காய் மட்டையைத் தண்ணீரில் அழுகப் போட்டால், சில நாட்களில் அது ஊறி, நார் உரிக்கும்படி பதப்படும். அழுகின மட்டையை நன்ருய் அடித்து நார் எடுக்கப்படுகிறது. இந்த நாரினல் சிறிய மணிக்கயிறு, கொச்சைக்கயிறு, தாம்புக்கயிறு, தேர் இழுக்கும் வடக் கயிறு முதலிய பலவகைக் கயிறுகள் செய்யலாம்.

தேங்காய் நாரைச் சுத்தம் செய்து மிகவும் மெல் லிய இழைகளாய் எடுக்கலாம். அப்படி எடுத்த இழை களால் அழகான பாய்கள் பின்னலாம். தரையில் விரிக்கத்தக்க விரிப்புக்கள் நெய்யலாம்; நுட்பமான வேறு வேலைகள் சில செய்வதும் உண்டு. பொத்தான், பை முதலிய சிறு பொருள்களும் இந்த நாரால் செய்யப்படுகின்றன.

பனை நாரினல் கட்டில் பின்னலாம்; கூடை, பெட்டி முதலியவை முடைவதும் உண்டு. ஈச்ச நாரும் இப் படியே உதவுகிறது. பனைமரத்திலிருந்து பனையகணி என்ற உள் நாரை யெடுத்து, மெத்தென்று இருக்கும் கட்டில் செய்யும் வழக்கம் தென்னுட்டில் உண்டு. புளிச்ச நாரைக் கயிறு திரித்துக் கட்டிலுக்குப்போடலாம். ஏழை களுக்கு உதவுவன புளிச்சை நார்க் கயிற்ருல் பின்னிய கட்டிலும், பனையகணியால் பின்னிய கட்டிலுமே யாகும்.

சணல் என்ற பயிர் தென்னுட்டில் இல்லை. வடநாட்டில் கங்கை நதியின் முகத்துவாரப் பிரதேசங் களில் சணல் நன்ருய் விளைகிறது. சணல் நாரை உரித்து

மெல்லிய இழைகளாக எடுத்துச் சாக்கு நெய்கிறார்கள். அரிசி, பருப்பு முதலிய பொருள்களை ஊருக்கு ஊர் அனுப்புவதற்கு இந்தச் சாக்கு அவசியம் வேண்டும். வங்காளத்தில் உற்பத்தியாகும் சணலும், சணற் சாக்கும் உலகில் பிரசித்தி பெற்றவை. அந்தச் சாக்குகளைத் தைப்பதற்கு உரிய கயிறும் சணலாலேயே ஆகிறது. எருக்க நார்க் கயிறும் சாக்குத் தைக்க உதவும்; புளிச்சை நார்க் கயிற்றாலும் சாக்குத் தைக்கலாம்.

உலகத்தில் எத்தனைவகைச் செடிகளில் நார் உண்டு என்று நாம் அறிந்து கொள்ளவில்லை. நன்றாய்த் தெரிந்த செடிகளில் கிடைக்கும் நார்களைக்கொண்டே, பலர் தொழில் செய்து பிழைக்கலாம். சோம்பல் இல்லாமல் தொழில்செய்து பிழைக்கும் எண்ணம் உள்ளவர்கள் நார்த்தொழிலைக் கேவலமாக நினைக்கமாட்டார்கள். வங்காள மாகாணத்தார் பெரிய சணல் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நடத்திப் பெரும் பணக்காரர்களாக விளங்குகின்றனர்.

சணல்	குவிந்து	தொடுக்கலாம்	விரிப்புக்கள்
இந்து	போத்தான்	மழமழப்பும்	கொச்சைக் கயிறு
சாக்கு	பனையகணி	மென்மையும்	உற்பத்தியாகும்
குஞ்சம்	பழமொழி	புளிச்சைநார்	எளிதேயாகும்
திரித்து	கேவலமாக	எருக்கம் செடி	மாகாணத்தார்
பட்டை	பிரசித்தி	பிழைக்கலாம்	தள்ளிவிடக்கூடாது

அரும்பதவுரை: உற்பத்தியாகும் - உண்டாகும். கொச்சைக்கயிறு - சன்னக்கயிறு. கேவலமாக - சிறுமையாக. பனையகணி - பனைநார். பிரசித்திபெற்றவை - பேர்போனவை. (எருக்கு + செடி = எருக்கஞ்செடி.)

பயிற்சி

I. பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்கள் எவையெவை? வினைச்சொற்கள் எவையெவை ?

(1) சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கி வா.

(2) பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்.

(3) வாழைநார் பூக்கள் தொடுக்கவும், மாலைகள் கட்டவும் உபயோகிக்கலாம்.

(4) சணல் நாரை உரித்து இழைகளாக எடுத்துச் சாக்கு நெய்கிறார்கள்.

(5) சோம்பல் இல்லாமல் தொழில் செய்து பிழை.

II. (1) பின்வரும் வார்த்தைகளில் பொருள் மாறுவதை விளக்கு. உரி, உறி. விலை, விளை. வேலை, வேளை. கிழி, கிளி. இலை, இழை.

(2) தொடுக்கலாம், உபயோகிக்கலாம், அதிகமாகிறது, எளிதாகும், செய்யலாம்—என்று முடியும்படியாக முறையே ஒவ்வொரு வாக்கியம் அமைக்க.

III. இப்பாடத்திலுள்ள படத்தைப் பார்த்துப் பின்வரும் வினக்களுக்கு விடை கூறு.

(1) படத்தில் உள்ள மனிதன் என்ன செய்கிறான் ?

(2) அவன் பக்கத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன ?

(3) அவன் எவ்வாறு உட்கார்ந்திருக்கிறான் ?

கேள்விகள்

1. எந்தெந்தச் செடிகளிலிருந்து நார் எடுக்கலாம் ?
2. சாக்கு எதிலிருந்து நெய்யப்படுகிறது? இத்தொழில் எங்கே நடைபெறுகிறது.
3. தேங்காய் நாரால் என்னென்ன வேலைகள் செய்யலாம் ?

4. வாழைநார் எப்படி உதவுகிறது ?
5. புளிச்சைநாரும், பனையகணியும் எப்படி உபயோகப்படுகின்றன ?

---

20. முரசு

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்;
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. ஒற்றைக் குடுப்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை;
மர்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை.

3. ஏவல்கள் செய்பவர் மக்கள்;—இவர்
யாவரு மோர்குல மன்றோ ?
மேவி யனைவரு மொன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்.

4. அன்பென்று கொட்டு முரசே,—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்.

5. மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்;
சிரத்தை யுடையது தெய்வம், இங்கு
சேர்த்த உணவெல்லை யில்லை.

—பாரதியார்.

முரசு	எல்லையில்லை	மனை வாழ்ந்திட
நிகர்	ஒற்றைக் குடும்பம்	மற்றைக் கருமங்கள்
ஏவல்	ஊருக்கு நல்லது	சீருக்கெல்லாம் முதல்
சிரத்தை	அனைவரும் மேவி	பொருள் வளர்ப்பவன்

அரும்பதவுரை: அனைவரும் - எல்லாரும். மேவி - சேர்ந்து. கருமங்கள் - காரியங்கள். மனை வாழ்ந்திட - வீடு சுகமுற. எல்லையில்லை - அளவில்லை. (எல்லை + இல்லை = எல்லையில்லை. அளவு + இல்லை = அளவில்லை.)

பயிற்சி

I. (1) வந்தேன், வருகிறேன், வருவேன்—இம்மூன்று வினைமுற்றுக்களையும் கவனி. வந்தேன் என்னும் வினைமுற்று, தொழில் முன்னமே நடந்துவிட்டதைக் குறிக்கிறது அல்லவா? வருகிறேன் என்னும் வினைமுற்று, தொழில் இப்போது நடந்துகொண்டிருப்பதைக் குறிக்கிறது. வருவேன் என்னும் வினைமுற்று, தொழில் இனி நடக்கப்போவதைக் குறிக்கும். தொழில் நடந்துவிட்டதைக் குறிக்கும் காலம் இறந்தகாலம். தொழில் நடந்துகொண்டிருப்பதைக் குறிக்கும் காலம் நிகழ்காலம். தொழில் நடக்கப்போவதைக் குறிக்கும் காலம் எதிர்காலம். ஆகையால், வந்தேன், வருகிறேன், வருவேன் என்பவை முறையே இறந்தகால வினைமுற்று, நிகழ்கால வினைமுற்று, எதிர்கால வினைமுற்று என்று சொல்லப்படும். எதிர்காலத்தை வருங்காலம் என்றும் சொல்லலாம்.

(2) பின்வரும் வினைமுற்றுக்களுக்குக் காலம் கூறுக. செய்தான், செய்தாய், செய்யும், உண்ணுகிறேன், ஓடுகிறது, பார்க்கிறேன், கொடுப்பார், கொடுத்தன, கொடுக்கின்றன, உழுகிறார்கள்.

II. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தையும் இரண்டிரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

(1) இங்கு யாவும் ஒன்றென்று கொண்டால், இன்பங்கள் யாவும் பெருகும்.

(2) மரத்தினை நட்டவன் தண்ணீர் நன்கு வார்த்து அதை யோங்கிடச் செய்வான்.

III. பொருள் ஓங்க வளர்ப்பவன் தந்தை. மனை வாழ்ந்திடச் செய்பவள் அன்னை. ஏவல்கள் செய்பவர் மக்கள். தந்தை, அன்னை, மக்கள் என்ற சொற்களை முறையே முதலில் வைத்து, இவ்வாக்கியங்களை மாற்றியமைக்க.

கேள்விகள்

1. ஒரு குடும்பத்தில் அன்னை செய்யும் வேலை யாது? தந்தை செய்யும் வேலை யாது? மக்கள் செய்ய வேண்டிய வேலை யாது?
2. நாட்டில் எப்போது இன்பம் பெருகும்?

---

21. பண்டைத் தமிழர் வியாபாரம்

தமிழ் நாட்டில் வாழ்ந்த நம் முன்னோர் வியாபாரத் துறையில் மிகவும் சிறந்திருந்தார்கள். யவனர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு, ரோமாபுரியிலிருந்து வந்து நம் நாட்டாரோடு கப்பல் வியாபாரம் செய்தனர். இந்த யவனர்களில் சிலர் நம் நாட்டிலே தங்கிப் பல தொழில்கள் செய்தார்கள்.

வியாபாரத்தில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று உள்நாட்டில் நடக்கும் வியாபாரம். மற்றொன்று துறை முகங்களின் மூலமாகக் கடல்வழியே அயல்நாடுகளோடு நடக்கும் கப்பல் வியாபாரம் ஆகும். உள் நாட்டு வியாபாரிகள் பலர் சேர்ந்து, நாட்டுக்கு நாடு கூட்டமாய்ப்

போய் வியாபாரம் செய்துவருவது வழக்கம். இப்படிப் போய்வரும் வியாபாரிகளின் கூட்டம் வாணிகச் சாத்து என்று சொல்லப்படும்.

வியாபாரிகள் செல்லும் வழிகளில் சிங்கம், புலி, யானை முதலிய மிருகங்களால் அவர்களுக்கு ஆபத்து நேரிடலாம். கள்வர்கள் வழிபறிக்கும் வழக்கமும் உண்டு. அதனாலேயே வியாபாரிகள் தனியே வெளியூர்களுக்குப் போவதில்லை.

சாத்துக்களை அமர்த்தி வியாபாரம் நடத்தும் வைசியன் சாத்துவான் என்ற பெயர் பெறுவான். சாத்துவார்களுள் பெரியவன் மாசாத்துவான் என்று புகழப்படுவான். பெரிய வைசியகுலத்தினன் ஆகிய கோவலன் தகப்பன், மாசாத்துவான் என்று பெயர் பெற்றிருந்தான்.

கடல் வழியில் வியாபாரம் செய்வதற்குப் பல மரக் கலங்கள் வேண்டும். கலங்களின் உதவியால் கடலிற் சென்று, அயல் தீவுகளில் வியாபாரம் செய்து பொருள் தேடும் வணிகன் நாய்கன் என்று பெயர் பெறுவான். பல நாய்கர்களுக்குத் தலைவனாய் இருப்பவன் மாநாய்கன் என்று புகழப்படுவான். கண்ணகியின் தந்தை இப்படி வியாபாரம் செய்து பொருள் தேடியவன்; ஆதலால் அவன் மாநாய்கன் என்று பெயர் பெற்றான்.

கடல் வழியே சென்று, தம் நாட்டிலுள்ள பொருள்களை அயல்நாடுகளில் விற்று, அயல்நாட்டுப் பொருள்களைத் தம் நாட்டுக்குக் கொண்டுவந்து, அதனால் பெரிய செல்வம் படைத்த வணிகர்க்குச் சோழ அரசர் 'எட்டி' என்ற பட்டம் கொடுத்தனர். அப் பட்டத்துக்கு

அடையாளமாகப் பொன்னுற் செய்த எட்டிப் பூவும் கொடுத்தார்கள்.

காவிரிப்பூம்பட்டினம் முற்காலத்தில் புகார் என்று பெயர் பெற்ற பெரிய நகரமாய் இருந்தது. புகார் நகரத்தில் சோழன் கரிகாலன் காலத்தில் பெரிய துறைமுகம் இருந்தது. துறைமுகத்தின் அருகில் பெரிய பண்டசாலை இருந்தது. இறக்குமதியாக வரும் பொருள்கள் மரக்கலங்களிலிருந்து இறக்கப்பட்டு அங்கே மலைபோலக் குவிந்திருக்கும். ஏற்றுமதியாகப் போகும் பொருள்களும் மூடை மூடையாக அங்கே மலை போலக் குவிந்திருக்கும்.

இந்தப் பண்டங்களை அளந்து எடை பார்த்து முத்திரையிட்டுச் சுங்கம் பெற்றுக்கொண்டு, வெளியே அனுப்புவதற்குச் சில உத்தியோகஸ்தர் இருந்தனர். இரவும், பகலும் ஓயாமல் துறைமுகங்களிலே வியாபாரத்தின் பெருக்கத்தையுடைய தொழில்கள் பல நடந்து கொண்டிருக்கும். சீனம், எகிப்து, ரோமாபுரி முதலிய அயல்நாடுகளோடு நம் முன்னோர் வியாபாரம் செய்தனர். தென்கடலிலுள்ள தீவுகளில் குடியேறியும் நம் நாட்டின் பெருமையை வளர்த்தார்கள்.

தீவு	ஓயாமல்	கடல் வழி	மாசாத்துவான்
அயல்	பெருக்கம்	அடையாளம்	கப்பல் வியாபாரம்
எட்டி	பட்டினம்	துறைமுகம்	வைசிய குலம்
எட்டிப்பூ	அமர்த்தி	உள்நாடு	கப்பல் வியாபாரம்
சுங்கம்	இறக்குமதி	வெளியூர்	வியாபாரத் துறை
யவனர்	ஏற்றுமதி	மூலமாக	எடை பார்த்து
நாயகன்	பண்டசாலை	கரிகாலன்	வழிபறிக்கும்
குடியேறி	மரக்கலம்	பண்டைத் தமிழர்	வாணிகச் சாத்து

அரும்பதவுரை: பண்டை - பழமை. சாத்து - கூட்டம். மூலமாக - வழியாக. வைசிய குலம் - வணிகர் குலம். துறை முகம் - கப்பல் தங்கும் கடற்கரை ஊர். மரக்கலம் - கப்பல்.

பயிற்சி

I. (1) நான் வந்தேன்—என்பதில் வந்தேன் என்பது வினைமுற்று. வருதலாகிய தொழிலைச் செய்தது நான். ஆதலால் நான் என்பது கருத்தா ஆகும். (கருத்தா =வினையைச் செய்பவர்.) ஒரு வாக்கியத்திலுள்ள கருத்தாவிற்கு எழுவாய் என்று பெயர்; கருத்தாசெய்யும் தொழிலுக்குப் பயனிலை என்று பெயர்.

(2) பூனை எலியைப் பிடிக்கிறது—இவ்வாக்கியத்தில் பூனை—எழுவாய். பிடிக்கிறது—பயனிலை. பூனை எதைப் பிடிக்கிறது என்று கேள்வி கேட்டால் எலியை என்று விடை வருகிறது அல்லவா? இது செயப்படுபொருள். செயப்படுபொருளாவது எழுவாய் செய்யும் தொழிலின் பயனை அடையும் பொருளாம்.

வாக்கியத்திற்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன உறுப்புக்கள் ஆகும்.

(3) பின்வரும் வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் குறிப்பிடுக.

அம்மா சோறு சமைக்கிறாள்.
பறவை முட்டை இடும்.
பறவை ஆகாயத்தில் பறக்கும்.
எப்போதும் உண்மையே பேசு.
நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

II. (1) சாத்துவார்களுள் பெரியவன் மாசாத்துவான் என்று புகழப்படுவான். இவ்வாக்கியத்தைப் புகழுவார்கள் என்று முடியும்படியாக மாற்றி வாசி.

(2) பல நாய்கர்களுக்குத் தலைவனாய் இருப்பவன் மாநாய்கன் என்று பெயர் பெறுவான். இவ்வாக்கியத்தைத் தலைவன் என்று முடியும்படியாக மாற்றி வாசி.

(3) காவிரிப்பூம்பட்டினம் முற்காலத்தில் புகார் என்று பெயர் பெற்ற நகரமாய் இருந்தது. இவ்வாக்கியத்தை இரண்டாகப் பிரித்து எழுது.

(4) பண்டசாலை, துறைமுகம், ஏற்றுமதி, இறக்குமதி—இச்சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைக்க.

கேள்விகள்

1. வியாபாரம் எத்தனை வகைப்படும்?
2. வாணிகச்சாத்து என்பது என்ன?
3. யாருக்கு நாய்கன் என்று பெயர்?
4. 'எட்டி' என்ற பட்டம் யாருக்கு உரியது?
5. புகார்த் துறைமுகத்தில் எப்படி வியாபாரம் நடைபெற்றது?

---

22. முதலை

நம் வீடுகளில் உள்ள பல்லிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். முதலை, பல்லியின் இனத்தைச் சேர்ந்த ஒரு பிராணி. அது பல்லியைப்போலவே இருக்கும்; ஆயினும், பல்லியைவிடப் பலமடங்கு பெரியது. முதலை ஆப்பிரிக்காவிலும், நமது இந்தியா தேசத்திலும் உள்ள பெரிய நதிகளில் காணப்படும். இலங்கைத் தீவிலும் முதலைகள் ஏராளமாக உண்டு.

அதன் உடல் மிகவும் நீளமானது. அதன் முதுகு மிகவும் உறுதியாயும், செதில்கள் நிறைந்தும் இருக்

கும். செதில்கள் ஓடுகளைப் போல மிகவும் கெட்டியாய் இருக்கும். அதன் வால் நீளமா யிருக்கும்; போகப் போக அது குறுகி நுனி வளைந்திருக்கும். நன்ருய் வளர்ந்த முதலைகள் சுமார் 16 அடி நீளமுள்ளவை. சில முதலைகள் 25 அல்லது 30 அடி நீளம் உள்ளன வாயும் இருக்கும்.



முதலையின் தலை நீளமானது. அது போகப்போகச் சிறுத்துத் திரண்டு இருக்கும். கண்கள் பச்சையாயும் வட்டமாயும் இருக்கும். காதுகளின்மேல் ஒரு தோல் வளர்ந்திருக்கும். முதலை தண்ணீரில் மூழ்கும்போது தோல்கள் காதை மூடிக்கொள்ளும். ஆகையால், தண்ணீர் காதுக்குள் நுழையாது. முதலையின் மூக்கில் இரண்டு துவாரங்கள் உண்டு. அவைகளை அது தன் விருப்பப்படி மூடவும் திறக்கவும் கூடும்.

முதலையின் வாய் மிகவும் விசாலமானது. அதன் தாடைகள் அதிக உறுதியுள்ளவை. மேல்வாயிலும் கீழ் வாயிலும் வரிசையாகப் பெரிய பற்கள் உண்டு. அவை பின்புறமாக வளைந்தும், வாள்போலக் கூர்மையாயும் இருக்கும். ஆகையால், முதலை ஒருபிராணியைப் பிடித்துக்கொண்டால், அந்தப் பிராணி எளிதில் தப்பிப் போக முடியாது.

முதலை நிலத்திலும், நீரிலும் வாழும் பிராணி. ஆயினும், அது தண்ணீரிலேயே பெரும்பாலும் சஞ்சரிக்கும். அது நீரில் மிக விரைவாய்ச் செல்லும்; நிலத்தில் சிறிது தூரம் மிக மெதுவாக நகர்ந்து செல்லும். அதனால் அதிக தூரம் செல்ல முடியாது. முதலைக்குக் குறுகிப் பருத்த நான்கு கால்கள் உண்டு. முன்னங்கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களும், பின்னங் கால்களில் நான்கு விரல்களும் இருக்கின்றன. விரல்களின் இடையில் தோல் படர்ந்து இருக்கும். ஆகையால், முதலை நீரில் எளிதாக நீந்தும்.

முதலை பார்வைக்கு விகாரமான பிராணி. அது மிகவும் பயங்கரமானது. மாமிசமே அதற்கு ஏற்ற உணவு. அது ஆற்றங்கரையில் மரக்கட்டைபோல அசையாமல் படுத்துக்கொண்டு, இரைக்காகக் காத்திருக்கும். தண்ணீர் குடிக்க வரும் பிராணிகளை அது பிடித்து, நீரில் இழுத்துக்கொண்டு போய், அமிழ்த்திக் கொன்று விடும். பிறகு அவற்றைக் கரைக்குக் கொண்டுவந்து மெதுவாகத் தின்னும். சிறு பிராணிகளைப் பிடித்த போதே விழுங்கி விடுவதுமுண்டு.

பெண் முதலை ஆற்றங்கரையிலுள்ள மணலில் இருபது முதல் முப்பது முட்டைகள் வரையில் இடும்.

அது அடைகாப்பதில்லை. சூரிய வெப்பத்தினால் முட்டைகளிலிருந்து குட்டிகள் வெளிப்படும். அவை வெளிப்பட்டவுடன் தண்ணீருக்குள் ஓடி மறைந்து விடும்.

பெரிய நதிகளில் முதலைகள் சஞ்சரிப்பதால், அவற்றில் குளிப்பது சில வேளைகளில் ஆபத்துக் கிடமாகும்.

நதி	தாடை	அசையாமல்
முதலை	எளிதாக	போகப்போக
குறுகி	அமிழ்த்தி	பயங்கரமானது
நீந்தும்	விகாரமான	அடைகாப்பதில்லை
சிறுத்து	சஞ்சரிக்கும்	பல்லி இனம்

அரும்பதவுரை: விகாரமான-அழகில்லாத. நதி-ஆறு. பயங்கரமானது - அச்சம் உண்டாக்கக்கூடியது. சஞ்சரிக்கும் - திரியும், வசிக்கும். (விகாரமான × இலக்ஷணமான. சிறுத்து × பெருத்து.)

பயிற்சி

I. (1) நாய் தெருவில் அலைந்து திரிகிறது. குரைக்கிற நாய் கடிக்காது. இவ்வாக்கியங்களில் அலைந்து, குரைக்கிற என்பன வினைச்சொற்களே. ஆனால் இவற்றில் கருத்து முடியவில்லை. கருத்து முடியாத வினைச்சொற்கள் எச்சவினை எனப்படும்.

(2) அலைந்து என்ற எச்சவினை, திரிகிறது என்ற வினைச்சொல்லைக் கொண்டு முடிகிறது. குரைக்கிற என்ற எச்சவினை, நாய் என்ற பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிறது.

(3) வினைச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினை வினையெச்சம் எனப்படும்.

பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சவினை **பெயரேச்சம்** எனப்படும்.

II. பின் வரும் வாக்கியங்களிலுள்ள பெயரெச்ச, வினையெச்சங்களை எடுத்துக் கூறு.

(1) காலையில் குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவேண்டும்.

(2) தகுந்த உணவு எது என்பதை மற்றவர் சொல்ல முடியாது.

(3) மருத்துவரை நாடாமல் இருந்தால் நோய்களும் மறையும்.

பயிற்சி

விகாரமான, சஞ்சரிக்கும், பலமடங்கு, இனம், போகப் போக, குறுகி, குறுகலாய், விசாலமாய்—இவ்வார்த்தைகளைப் பின்வரும் கோடிட்ட இடங்களில் ஏற்றவாறு அமைக்க.

சீசாவின் வாய்__________இருக்கிறது.

வீட்டுக்கூடம்__________இருக்கிறது.

புலி பூனை__________.

புலி பூனையைவிட__________பெரியது.

கோபுரத்தின் உச்சி__________இருக்கும்.

காக்கை ஒரு__________பறவை.

காட்டில் துஷ்டமிருகங்கள்__________.

கேள்விகள்

1. முதலையின் உடல், தலை, காது, வாய் இவற்றின் அமைப்பைக் கூறு.
2. அது இரையைப் பிடித்துத் தின்பது எவ்வாறு?
3. முதலை எவ்வளவு பெரிதாக இருக்கும்? அது எங்கே அதிகமாகக் காணப்படுகிறது?

23. துஷ்டன் அடைந்த பலன்

1. சிறுவர் பலபேர் சேர்ந்தொருநாள்
சென்றனர் பழங்கள் பறித்திடவே;
திறமிகு நாவல் மரமொன்றில்
சிறந்த பழம்பல கண்டனரே.

2. உடனே அடங்கா மகிழ்ச்சியோடும்
ஓடினர்; கற்களை எடுத்தடித்தார்;
கற்கள் படவே கனிகள்பல
பலபல என்று உதர்ந்தனவே.

3. சிதறி மண்ணில் வீழ்ந்தபழம்
தின்னற் காகா தெனத்தேர்ந்து
பதறிப் பறிக்க வகையின்றிப்
பாரில் நின்று தவித்தனரே.

4. கூடி நின்றூர் களிலொருவன்
குலவி மரத்தில் ஏறியபின்
தேடி அசைத்துப் பழமுதிர்த்தான்;
தின்றனர் மற்றவர் தேர்ந்தெடுத்தே.

5. பையன் பழங்களை உதிர்க்குங்கால்
பார்த்தான் கிளையில் கூண்டொன்றை;
"பையக் குருவிக் கூடுதனைப்
பாங்காய் எடுப்பேன் நான்," என்றான்.

6. என்றவன் கிளைமேல் ஏறிப்போய்
எழிலார் கூண்டை இனிதெடுத்து
நின்று பிரித்தே பலபுறமும்
நிலத்தில் எறிந்தே மகிழ்ந்திட்டான்.

7\. அப்போ திரண்டு குருவிவந்தே
அங்கும் இங்கும் பறந்தோடி
ஒப்பில் கூண்டைக் காணுமல்
உலேந்தே பதைத்துக் கத்தினவே.

8\. சிறுவன் உவப்போ டிறங்குகையில்
சிறுகிளே ஒன்றில் கால்வைத்தான்;
உறுகிளே மளமள வெனமுறிய
உயங்கி வீழ்ந்து துன்புற்ருன்.

9\. குற்றம் அற்ற குருவிகளின்
கூண்டைச் சிறுவன் பிரித்ததனுல்
உற்ற கதியை அறிந்தீர்;மேல்
உறுதீங் கொருவர்க் கியற்ருதீர்.

பைய	உவப்பு	இயற்ருதீர்	நாவல் மரம்
பாரில்	பாங்காய்	குற்றம் அற்ற	பலபல என்று
குலவி	பதைத்து	பதறிப் பறிக்க	தின்னற்காகாது
சிதறி	உலேந்தே	உயங்கி வீழ்ந்து	மளமளவென

அரும்பதவுரை: பாரில் - பூமியில். இயற்ருதீர் - செய்யாதீர். உவப்பு - சந்தோஷம். குலவி - சந்தோஷமாய். பாங்காய் - முறையாய். உயங்கி - வருந்தி. உலேந்தே - மனங் கலங்கியே.

பயிற்சி

I. (1) ஆ! என்ன அதிசயம்! அவன் ஓ! என்று அலறினுன். இவ்வாக்கியங்களிலுள்ள ஆ, ஓ என்பன என்ன சொற்கள்? இவை தனியே வருவதில்லே. சொற்களின் இடையே நின்று பொருளேத் தரும். ஆதலால் இவை இடைச்சொற்கள் எனப்படும். இடைச்சொல்லாவது பெயர், வினேச்சொற்களின் இடையே பயின்று வரும் சொல்லாம். இம்மாதிரியே மற்று, உம், ஏ, ஓ முதலியன இடைச்சொற்களே.

(2) இது ஒரு தவப் பிஞ்சு—இவ்வாக்கியத்தில் தவ என்பது பிஞ்சின் குணத்தைத் தெரிவிக்கிறது. இவ்வாறு பெயர், வினைகளின் குணத்தை உணர்த்தும் சொல் உரிச்சொல் எனப்படும்.

(3) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைச்சொல், உரிச்சொல் இவைகளை எடுத்துக் கூறு.

தீவினை அகற்று.

அவன் சால உழைக்கிறான். (சால - மிக.)

பாம்பு புஸ் என்று சீறுகிறது.

மழை சோ என்று பெய்கிறது.

II. ஒவ்வோரு செய்யுளிலும் கூறப்படும் விஷயத்தைச் சுருக்கி ஒவ்வொரு வாக்கியத்தில் எழுது.

III. பல பல, மள மள, சிதறி, பைய, அங்கும், இங்கும்—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

கேள்விகள்

1. சிறுவன் செய்த துஷ்டத்தனம் என்ன?
2. கடைசியில் அவனுடைய கதி என்ன ஆயிற்று?
3. இக்கதையால் விளங்கும் நீதி யாது?

---

24. தேசத்தொண்டர்

ஒரு தேசத்தின் நன்மையைக் கருதித் தம்மால் இயன்றவரை தொண்டு செய்பவர் தேசத்தொண்டர் ஆவர். தெய்வபக்தியினால் தொண்டுசெய்த பெரியோர்களும் தொண்டர்களே. தெய்வத்தினிடம் அப்பெரியோர் மனம் உருகுவதுபோலத், தேசத்தொண்டர் மனம் தேச நலத்துக்காக உருகவேண்டும்.

தேசம் என்றால் மலை, காடு, மண், கல், கோயில், மாளிகை முதலிய அங்கங்களை உடைய நாடு என்று நினைக்கக்கூடாது. ஒரு தேசத்து மக்களே அதன் உயிர் ஆவார்கள். ஒரு தேசத்தில் வாழும் குடிகள், ஒன்றும் விளையாததாயினும் தம் நாட்டை உள்ளமுருகிப் போற்று வார்கள். மனிதர் நல்ல குணம் உள்ளவர்களாய் வாழும் நாடு நல்ல நாடு ஆகும்; தீயவர் வாழும் நாடு தீயநாடே.

என்ன குறைகள் இருந்தாலும், நாம் பிறந்த நாடு பொன்னாடு என்ற எண்ணம் தம் தேசத்தில் அன்புள்ள எல்லோருக்கும் உண்டு. இயற்கையில் எல்லா வளங் களும் நிறைந்திருக்கும், நம் நாட்டை நாம் போற்றா விடின் அது மூடத்தனமே.

தேச மக்களின் பொது நன்மைக்காகத் தேசத் தொண்டர் உழைக்கவேண்டும். சில வழிகள் அநேகர் பார்த்துப் பாராட்டும் வழிகளாய் இருக்கும். வேறு சில வழிகள் பிறர் கண்ணிலே படாமல் மறைவாகவே செய் யப்படுவனவாய் இருக்கும். எந்தப் பணியாய் இருந்தா லும், அதை முழுமனத்தோடு செய்பவனே தேசத் தொண்டன் ஆவான். நம் நாட்டில் கல்வி வளர்ச்சி மிகவும் குறைவாய் இருக்கிறது. கிராமங்களிலே புகுந்து வயிற்றுக்குக் கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு அறியா மைப்பேயை ஓட்ட முயல்வது ஒரு சிறந்ததொண்டாகும். நோய்கள் பலவாய்ப் பெருகி ஆயிரக் கணக்கில் ஜனங் கள் இறக்கிறார்கள். நோய்வரும் காரணங்களையும், வரா மல் வாழும் முறைகளையும் ஜனங்களுக்குச் சொல்வது ஒரு பெரிய சேவையாம். கணக்கு வழக்குத் தெரியாமல் கடன்கள் வாங்கி, வீடு நிலங்களை விற்றுப் பலர் ஏழை

களாய்ப் போகிறார்கள். அப்படிக் கெடும் குடியானவர்களுக்கு நற்புத்தி புகட்டுவது ஒரு பெரிய ஊழியமாகும்.

சிலர் தமக்கு வரும் கொஞ்சம் பொருளையும் குடி, சூது, வம்பு, வழக்கு முதலிய கெட்ட வழிகளில் அழித்து ஓட்டாண்டி ஆகிறார்கள். அவர்களுக்கு நல்வழி கற்பிப்பது ஒரு சிறந்த தொண்டாகும்.

"நம் தேசம் இது, தேசமக்கள் எல்லாரும் நம்மவர்" என்ற எண்ணம் எளிதில் உண்டாவதில்லை. சில இடங்களில் தகுந்த காரணம் இல்லாமல் மக்கள் கலகம் செய்துகொண்டு, ஆயிரக் கணக்காக மடிகின்றார்கள். இந்த இடங்களில் சமாதானம், சகோதர உணர்ச்சி என்ற உண்மைகளைப் பரவச் செய்வது தேசத்தொண்டர் பணியே ஆகும். இப்படி இன்னும் எத்தனையோ வழிகளில் தேசத்தொண்டர் உழைக்கலாம். கூலி, சம்பளம், பட்டம், பெருமை, வெகுமானம் முதலிய இலாபம் ஒன்றையும் நினைக்காமல், தேசத்தொண்டு செய்வது எல்லார்க்கும் எளிதாய் இராது.

பணி	நற்புத்தி	விளையாதது	சமாதானம்
சேவை	புகட்டுவது	மூடத்தனம்	மடிகின்றார்கள்
தீயவர்	ஓட்டாண்டி	முழுமனம்	சகோதர உணர்ச்சி
ஊழியம்	வெகுமானம்	அறியாமை	கணக்கு வழக்கு
தொண்டர்	இயன்றவரை	தேசநலம்	உழைக்கலாம்
பொன்னாடு	அங்கங்களை	போற்றாவிடின்	எத்தனையோ

அரும்பதவுரை: சேவை - தொண்டு. ஊழியம் - பணி. சமாதானம் - அமைதி. (நல்+புத்தி=நற்புத்தி. பொன்+நாடு=பொன்னாடு.)

பயிற்சி

I. (1) வாக்கியங்கள் முடிகிற இடத்தில் முற்றுப் புள்ளி என்னும் குறி வைக்கப்படும் என்று முன் வகுப்

பில் படித்தீர்கள். அதுபோன்ற வேறு பலவித நிறுத்துக் குறிகளையும் புத்தகங்களில் பார்க்கிறோம்.

காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி முதலிய நோய்கள் வந்தவுடனே மருந்து தேடாமல், கொஞ்சம் பட்டினியிருந்து பார்த்துக் குணமாகாவிட்டால், பிறகு வைத்தியரைத் தேடலாம். இவ்வாக்கியத்தில் , இக்குறியைப் பலவிடங்களில் பார்க்கின்றீர்கள். இதற்குக் **காற்புள்ளி** என்று பெயர். காற்புள்ளி உள்ள இடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும். (மாத்திரை = கண் இமைக்கும் நேரம்.)

கருத்தை நோக்கிச் சிறிது நிறுத்தி வாசிக்கவேண்டிய சொற்களுக்கு இடையிலும், சொற்றொடர்களுக்கு இடையிலும் இந்த நிறுத்துக்குறி வைக்கப்படும்.

(2) ஔவையார் "வரப்புயர" என்று வாழ்த்தினார். இவ்வாக்கியத்தில் ஔவையார் கூறிய வரப்புயர என்பதை நாம் அவர் கூறியவாறே எடுத்துக் கூறுகிறோம். இம்மாதிரி இடங்களில் " " இக்குறிகள் வைக்கப்படும். இவற்றிற்கு **மேற்கோள் குறிகள்** என்று பெயர்.

பின்வரும் வாக்கியங்களில் முற்றுப்புள்ளி, மேற்கோள் குறிகள் ஆகியவைகளைச் சரியானபடி அமைக்க.

அப்பா, இதோ ஒரு கடிதம் வந்திருக்கிறது என்று சுந்தரம் ஓடிவந்தான் தகப்பனார் அதை வாசித்துப் பார்த்து, இக்கடிதம் மாமா எழுதியிருக்கிறார் என்று சொன்னார்

II. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) ——— தேசத்தின் உயிர்.

(2) தேசத்தின் நன்மைக்காக உழைப்பவர்கள் ———.

(3) தேசத்தொண்டர்கள் முழுமனதோடு ——— ——— செய்யவேண்டும்.

(4) தேசத்தொண்டர்கள் ———— ————உணர்ச்சி இவைகளைப் பரவச்செய்ய வேண்டும்.

(5) தேசத்தொண்டர்கள் ———— ———— ———— ———— ———— இவைகளை நினைக்கக்கூடாது.

கேள்விகள்

1. தேசத்தொண்டர் என்பவர் யார்?
2. என்னென்ன வகைகளில் தேசத்தொண்டு செய்யலாம்?
3. கிராமவாசிகளுக்குச் செய்யத்தக்க சேவை யாது?
4. தேசத்திற்கு உயிர் யார்? எத்தகைய நாடு நல்ல நாடு? எது தீய நாடு ஆகும்?

---

25. அரிச்சந்திரன்

(ஒரு நாடகம்)

[உண்மையின் வெற்றி.]

பாத்திரங்கள்: விசுவாமித்திரர், அரிச்சந்திரன், சந்திரமதி, வீரபாகு.

இடம்: காசி மயானம்.

காலம்: மாலை.

முதற் களம்

[வீரபாகு சந்திரமதியை அழைத்து வருகிறான். அரிச்சந்திரன் மயானத்தில் நிற்கிறான்.]

வீரபாகு: அப்பா, இந்தப் பெண் அரசகுமாரனைக் கொன்றுவிட்டாள். நியாயாதிபதிகள் கொலைத் தண்டனை விதித்திருக்கிறார்கள். வாளால் இவளை

வெட்டவேண்டும். கொலைக்களத்துக்கு அழைத்துப் போ.

அரிச்சந்திரன்: யார்? இந்தப் பெண்ணு? சிசுஹத்தியா? என்ன கொடுமை! என்ன பாவம்! பெண்ணே, இப்படி வா. போகலாம்.

[சந்திரமதி திரும்புகிறாள். முகத்தைப் பார்க்கிறான்.]

சந்திரமதி: நாதா!

அரிச்சந்திரன்: யார்! சந்திரமதியா! என்ன இது! நான் காண்பது கனவா, நனவா!

சந்திரமதி: காற்பணமும், முழத்துண்டும் வாங்கிவர வீட்டுக்குப் போனேன். கிடைக்கவில்லை. வரும் வழியில் ஒரு குழந்தை பிணமாய்க் கிடந்தது. இருட்டில் நம் குழந்தை என்று எண்ணி எடுத்து மடியில் வைத்துக்கொண்டு அழுதேன். சேவகர் என்னைக் கொலைகாரி என்று பிடித்தார்கள். இதுவும் கடவுள் செயலே. குழந்தையோ இறந்தான். இனி நாம் எதற்காக உயிரோடு இருக்கவேண்டும்.

அரிச்சந்திரன்: இதுவும் ஒரு சோதனை!

[மயானத்துக்கு அழைத்துப் போகிறான்.]

இரண்டாம் களம்

இடம்: சுடுகாட்டுப்பக்கமுள்ள கொலைக்களம்.

[அரிச்சந்திரன் சந்திரமதியை முன் நிறுத்தி வாள் கைக்கொண்டு நிற்கிறான்.]

அரிச்சந்திரன்: பெண்ணே, உன் இஷ்ட தெய்வத்தை நினைத்துக்கொள்.

சந்திரமதி: என் தெய்வம், என் வாழ்வு எல்லாம் நீரே.

அரிச்சந்திரன்: இப்படி நில், தலை வணங்கு.

[வாள் ஓங்கும் சமயம் விசுவாமித்திரர் ஓடி வருகிறார்.]

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா, நிறுத்து, நிறுத்து பெண்கொலை வேண்டாம். இன்னும் நீங்கள் இன்பவாழ்வு பெற வழி உண்டு.

அரிச்சந்திரன்: [வணங்கி,] முனிவர் பெருமானே, செல்வம் இழந்தோம், அரசு இழந்தோம், அருமருந்தன்ன ஒரே மகனை இழந்தோம். இனி வாழ்வு என்ன வேண்டியிருக்கிறது!

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா, நீ ஒரு வார்த்தை சொன்னால், நான் இவ்வளவையும் மாற்றி விடுவேன்.

அரிச்சந்திரன்: என்ன சொல்லவேண்டும்?

விசுவாமித்திரர்: "நாட்டை நான் தரவில்லை; நீரே கவர்ந்துகொண்டீர்," என்று சொன்னாற் போதும்.

அரிச்சந்திரன்: நானே மனமார உமக்குக் கொடுத்துவிட்டு இந்தப் பொய் பேசலாமா? எல்லாவற்றையும் இழந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறோம். இனி யாங்கள் அடையப்போவதாக ஒன்று உள்ளது என்று நாங்கள் நம்புகிற நற்கதியையே இழப்பதாய் இருந்தாலும் ஒரு பொய் பேசத் துணியேன்.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா, உன் மகனும், காசிராஜன் மகனும் உயிரோடு எழுந்து வருவார்கள். சந்திரமதியும் சாவாதிருக்கலாம். ஒரு பொய் சொல்லமாட்டாயா?

அரிச்சந்திரன்: என்ன வருவதாய் இருந்தாலும் பொய் சொல்லேன்.

விசுவாமித்திரர்: அப்படியா! ஆனால் நான் போகிறேன். [போகிறார்.]

அரிச்சந்திரன்: சந்திரமதி, சத்தியமே ஜயம்! தலை வணங்குவாய். [வாளை ஓங்கி,] உயிர்களுக்கு ஒருவனே கடவுள் ஆனால், அவன் அருளியது மறை என்றால், அந்த மறைப்பொருளில் உண்மையே உயர்ந்த தருமமாய் இருக்குமெனில், நான் அந்த உண்மையை என் வாழ்நாள் எல்லாம் விரதமாகக் கைக்கொண்டிருப்பது உண்மையானால், இவள் இந்த வழியில் என்னையே பின்பற்றியிருப்பது உண்மை என்றால் இவள் சாகாதிருப்பாளாக! நான் சொல்லிய இவை எல்லாம் பொய்யாகுமானால், இப்பொழுதே இவள் இறந்தொழிவாளாக!

[அரிச்சந்திரன் வாளை வீசுகிறான். அது சந்திரமதியின் கழுத்தில் மாலையாக விழுகிறது. தேவர்கள் பூமழை பொழிகின்றனர்.]

சந்திரமதி: நாதா, மெய் வென்றது.

[விசுவாமித்திரரும், வசிஷ்டரும் வருகிறார்கள்.]

அரிச்சந்திரன்: [வணங்கி,] பெரியோர்களே, நமஸ்காரம்.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா, நான் உன்னை எத்தனையோ வழிகளிற் சோதித்தேன். நீ புடம் இட்ட பொன்போல் விளங்குகிறாய்.

வசிஷ்டர்: குழந்தாய், எல்லாம் நன்மைக்கே.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா, இரண்டு குழந்தைகளும் உயிர் பெற்று எழுவார்கள். நாட்டையும் பெற்றுக்கொண்டு முன்போல் அரசாள்வாயாக.

அரிச்சந்திரன்: முனிவர் பெருமானே, கொடுத்ததை வாங்குவது எங்கள் குல வழக்கம் இல்லை.

வசிஷ்டர்: அரிச்சந்திரா, இது ஒரு சோதனை. நானும் விசுவாமித்திரரும் தேவசபையில் செய்த ஒரு சபதத்தால் நீ இவ்வளவு பாடும் பட்டாய்.

அரிச்சந்திரன்: புலையனுக்கு அடிமைப் பட்டேன். சுடலை காத்தேன். இனி நான் எப்படி அரசன் ஆவேன்.

வசிஷ்டர்: நீ புலையனுக்கு அடிமைப்படவில்லை. தரும தேவதைக்கு அடிமைப்பட்டாய். நீ காத்தது சுடலையன்று, யாகசாலையாம். இது மெய் என்பதை இதோ மெய்ப்பிக்கிறேன். ஆதலால் அரசை ஏற்றுக் கொள்வாய்.

அரிச்சந்திரன்: இது தங்கள் ஆணையாயின் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

விசுவாமித்திரர்: அரசே, என் தவத்திற் பாதி தருகிறேன். பெற்றுக்கொள்க. நான் இழைத்த தீமைகளை எல்லாம் மறந்துவிடு.

வசிஷ்டர்: அரிச்சந்திரா, நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம். தருமம் செழிக்க, அரசு புரிந்து நீடூழி வாழ்க.

[முனிவர்கள் போகிறார்கள்.]

அரிச்சந்திரன்: சந்திரமதி, இனி நாம் நகர்க்குட் போவோம்.

[காசிராஜன், இரண்டு குழந்தைகளோடு வந்து எதிர்கொள்கிறான்.]

சந்திரமதி: என் செல்வங்களே!

காசிராஜன்: தாயே, என் குற்றத்தைப் பொறுக்க வேண்டும்.

அரிச்சந்திரன்: எல்லாம் நலமே முடிந்தது.

[போகிறார்கள்.]

சோதனை	அரச குமாரன்	இஷ்ட தெய்வம்
சிசுஹத்தி	கொலைத் தண்டனை	முனிவர் பெருமான்
புடம் இட்ட	கொலைக்களம்	கவர்ந்து கொண்டீர்

அரும்பதவுரை: குமாரன் - மகன். சிசு - குழந்தை. ஹத்தி - கொலை. புடம் இட்ட - சுத்தி செய்த.

---

26. பாரி

பண்டைக் காலத்திலே தமிழ் நாட்டில் பாரி என்னும் பெயருள்ள சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவனுக்குரிய நாடு மலை நாடு. அந்த நாட்டுக்குப் பறம்பு நாடு என்று பெயர். அவன் சிறந்த போர்வீரன்; தன்னை நாடி வரும்புலவர்களுக்கு அவர்கள் விரும்பும் பொருள்களை நிரம்பக் கொடுத்துப் பெரும்புகழ் பெற்ற வள்ளல்.

பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையது. அவன் அந்த முந்நூறு ஊர்களையும், மற்றெல்லாத் திரவியங்களையும் அகமலர்ச்சியோடு பரிசிலருக்கு அளித்தவன். அவன் இன்சொல்லே பேசும் மாண்புடையவன்; வன்சொற்களை அவன் மறந்தும் வழங்கான். அவன் கடை எழு வள்ளல்களென்று புகழ் எய்திய ஏழு கொடையாளிகளில் ஒருவன்.

அவன் காலத்திலிருந்த புலவர்களில் அவனுக்கு நண்பராய் அவனது வீரத்தையும், கொடைத்திறத்தையும் எடுத்துரைத்தவர் கபிலர் ஆவார்.

ஒரு சமயம் அவன் அழகிய தேரில் ஏறிக் குறிஞ்சி நாட்டு வளங்களைக் கண்டு களிக்கச் சென்றான் ; அங்குள்ள பல வனங்களின் வளப்பங்களை எல்லாம் பார்த்து மகிழ்வடைந்து வரும்போது ஒரு முல்லைக் கொடியைக் கண்டான்.



அது நன்றாகச் செழித்து இலைகள் அடர்ந்து பொலிவுற விளங்கிற்று. ஆயினும், அதுமேல் நோக்கிப் படர்ந்து வளர்வதற்குக் கொழு கொம்பு இல்லாமையால், தத்தளித்துக்கொண் டிருந்தது. அதைக் கண்ட

பாரி மிகவும் பரிதபித்தான். "அந்தோ! இந்த முல்லைக் கொடி படருவதற்குப் பிடிப்பில்லாமல் வாடுகின்றதே! என்செய்வேன்!" என்று மனம் நொந்தான்; உடனே அதனருகிற் சென்று, தன் தேரை ஆதாரமாக நிறுத்தினன்; உள்ளம் மகிழ்ந்தான். முல்லைக் கொடியும் தேரைப்பற்றியது. பின்னர்ப் பாரி தன் கால்கள் சிவக்க நடந்து சென்று, தன் அரண்மனையை அடைந்தான்.

பாரியின் கொடைத் திறத்தையும், பெரும்புகழையும் அறிந்து அக்காலத்தில் தமிழ் நாட்டில் அரசு செலுத்திய சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தரும் அவனிடத்தில் அழுக்காறுகொண்டு அவனை எதிர்த்துப் போர் செய்தனர்.

பாரியை வெல்ல அவர்களால் முடியவில்லை. ஆகையால், அவர்கள் வஞ்சனையால் அவனைக் கொன்றார்கள். பாரிக்கு அங்கவை, சங்கவை என்னும் இரு புதல்விகள் உண்டு. அவர்கள் பாரியின் நண்பரான கபிலரைப் புகலடைந்தார்கள்.

அவர் அப்பெண்டிர் இருவரையும் சிற்றரசருக்குத் திருமணம் செய்ய முயற்சி செய்தார். அவ்வரசர்கள் தமிழ் நாட்டு மூவேந்தருக்குப் பயந்து மறுத்துவிட்டனர். அக்காலத்தில் கல்விச் செல்வியாராகிய ஔவையார் தமிழ் நாட்டில் வசித்து வந்தனர். அவரிடத்தில் கபிலர், பாரி மகளிரை ஒப்படைத்தார்.

ஔவையார் திருக்கோவலூர் அரசனிடம் சென்று அப்பெண்மணிகளை விவாகம் செய்து கொள்ளும்படி அவனை ஏவினர். அவ்வரசன், "மூவேந்தரும் வந்திருந்து விவாகத்தை நடப்பித்தால் எனக்கு, அப்பெண்

மணிகளை மணஞ்செய்துகொள்ளத் தடையில்லை,'' என்று சொன்னான்.

ஔவையார் அவ்வண்ணமே மூவேந்தரையும் வரவழைத்து, அவ்வரசனுக்கு அப்பெண்டிர் இருவரையும் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். பாரி மகளிர் ஔவையார் செய்த நன்றியைப் பெரிதும் பாராட்டினர். பாரி செய்த அறமே அவர்களுக்கு உதவியாய் நின்றது.

பாரி அருமையான பெருங்குணங்கள் அமையப் பெற்றவன்; 'இம்மைச் செய்தது மறுமைக்காம்,' என்னும் எண்ணமின்றிக் கொடுக்கும் மேலான குணமுடையவன். 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை,' எனச் சுந்தரமூர்த்தி நாயனாரும் பாராட்டிக் கூறுவாரானால், அவனது கொடைத்தன்மையை என்னென்று சொல்வது!

கடை	மகளிர்	எதிர்த்து	நடப்பித்தால்
திறம்	புதல்வி	பரிசிலர்	வாடுகின்றது
மாண்பு	குறிஞ்சி	பரிதபித்தான்	கொழுகொம்பு
பண்டை	களிக்க	வனங்கள்	கொடையாளி
கபிலர்	ஏவினார்	வழங்கான்	எடுத்துரைத்தவர்
பிடிப்பு	நாயனார்	அழுக்காறு	கல்விச் செல்வி
எய்திய	வளங்கள்	அளித்தவன்	திரவியங்களையும்
இம்மை	மலைநாடு	தத்தளித்து	புகலடைந்தான்
மறுமை	திருமணம்	பொலிவுற	மனம் நொந்தான்
வள்ளல்	விவாகம்	அவ்வண்ணம்	கொடுக்கிலாதான்

அரும்பதவுரை: மாண்பு - மேன்மை. பண்டை - பழைய. எய்திய - அடைந்த. இம்மை - இவ்வுலகம். மறுமை - மேலுலகம். வழங்கான் - சொல்ல மாட்டான்.

பரிசிலர்-இரப்போர். பரிதபித்தான்-வருந்தினன், இரக்கங் கொண்டான். கடை - கடைசி.

பயிற்சி

I. (1) பின் வரும் வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் என்ன சொல்?

பாரியை வெல்ல அவர்களால் முடியவில்லை.

வன்சொல் அவன் வாயில் வராது.

பாரி மகளிர் ஔவையார் செய்த நன்றியைப் பாராட்டினர்.

(2) மேற்கூறிய வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறு.

II. கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

பாரி ஒரு_____.

அவன் _____ _____ ஆண்டு வந்தான்.

அந்நாடு _____ _____ உடையது.

அம் முந்நூறு ஊர்களையும் அவன் _____ _____.

அவன் _____ _____ இயல்புடையவன்.

அவன் அருமையான குணங்கள் _____ _____.

கேள்விகள்

1. பாரி மன்னன் எந்த நாட்டை ஆண்டு வந்தான்? அவன் எத்தகைய இயல்புடையவன்?
2. பாரி மன்னன் முல்லைக் கொடிக்குத் தன் தேரைக் கொடுத்த வரலாற்றைக் கூறு.
3. மூவேந்தர்கள் பாரியுடன் ஏன் போருக்குச் சென்றார்கள்? அவர்கள் எப்படி வென்றார்கள்?
4. பாரியின் மகளிர் யாவர்? அவர்களுக்கு ஔவையார் செய்த உதவி யாது?

27. நோயற்ற வாழ்வு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செலவம்' என்பது ஒரு பழமொழி. எவ்வளவு தனவந்தனுய் இருந்தாலும், ஓயாமல் மருந்துக்கு அலையும் மனிதனுக்கு உலக வாழ்க்கையில் இன்பம் இல்லை. பலவகைப் பலகாரங்களோடு தன் கண்முன்னே பலர் விருந்து உண்ணத் தான்மட்டும் கஞ்சி குடிக்க நேர்ந்தால், அந்தப் பணக்காரன் மனம் என்ன பாடுபடும்?

நோயில்லாமல் வாழ்வதற்குச் சில இயற்கை விதிகளைக் கைக்கொள்ளவேண்டும். இயற்கை விதிகளின்படி ஒழுகுபவனை நோய் அணுகாது. எப்பொழுதாவது வந்தாலும், விரைவிலே குணமாய் விடும். இயற்கை விதிகளைக் கையாடுவதற்குப் பணச்செலவும், வேறு ஒருவர் துணையும் வேண்டுவதில்லை; நாமே அறிந்து ஒழுங்காய் நடக்கலாம்.

ஞாயிறு எழுவதன்முன் நாம் படுக்கையை விட்டு எழவேண்டும். சிறு குழந்தைகள் சூரியன் உதிக்கும் வரை தூங்கினுலும் குற்றமில்லை. மற்ற எல்லோரும் சூரியோதயத்துக்கு ஒரு மணி நேரம் முன்னதாக எழுவது நல்லது. இப்படி எழுந்திருக்கப் பழகுவது முதலில் சிரமமாகத்தான் தோன்றும். ஆனுல் பழகப் பழக அது எளிதாய்விடும்.

அதிகாலையில் எழுந்து உட்கார்ந்து, சிறிது நேரம் கடவுளை நினைத்து வணங்கவேண்டும். முகம் கை கால்களைக் கழுவிப் புத்தகங்களை எடுத்துப் படிக்கவேண்டும். அதிகாலை வேளையில் எந்தப் பாடம் படித்தாலும், பசுமரத்து ஆணிபோல் நன்ருய் மனதிற் பதியும்.

கொஞ்ச நேரம் தேகப்பயிற்சி செய்யவேண்டும். ஆனால், எதுவும் அளவுக்கு மேற்படலாகாது.

காலையில் குளிர்ந்த தண்ணீரில் குளிக்கவேண்டும். வெந்நீரில் குளிப்பது உடம்புக்கு நன்மை செய்வதில்லை. ஆறுகள் குளங்கள் உள்ள இடங்களில் நன்றாய் நீந்தி விளையாடிக் குளிக்கலாம். நீந்துவது ஒரு சிறந்த தேகப்பயிற்சியாகும்.

நல்ல பசியெடுத்தபின், வயிற்றுக்குத் தக்க உணவை அளவோடு சாப்பிடவேண்டும். நாக்கின் உருசிக்காக வயிற்றுக்குள் அடைக்கும் உணவு உடம்பையே கெடுத்துவிடும். நாம் உட்கொள்ளும் உணவு வயிற்றுக்கு ஒத்துக்கொள்ளுமா, சீரணமாகுமா என்பதைத் தெரிந்துகொண்டே எதையும் உண்ண வேண்டும்.

தகுந்த உணவு எது என்பதை மற்றவர் சொல்ல முடியாது. அவர் அவரே தமது வயிற்றின் தன்மையை அறிந்து முடிவு செய்யவேண்டும். கோதுமைமா, ரவை, சர்க்கரை, வெண்ணெய், நெய் முதலியவை வடநாட்டில் உள்ள ஜனங்களுக்குத் தக்க உணவாம். அரிசி, சோளம், கேழ்வரகு, கம்பு முதலியவை தென்னாட்டவர்க்குத் தகுந்த ஆகாரமாகும். சில ஜனங்கள் மிளகாயை அதிகமாய்ச் சேர்ப்பார்கள். சிலர் அதிகமாய் நெய் சேர்த்துக்கொள்வார்கள். மற்றவர்களைப்போல நாமும் உணவைக் கொள்ளவேண்டுமென்று நாம் விரும்பலாகாது.

ஒரு நாளைக்கு இரண்டுவேளை உணவே போதுமானது. இடைவேளைச் சிற்றுண்டி சிலர்க்கு அவசியமாய் இருக்கும். எதைத் தின்றாலும் முன்னே உண்ட உணவு

சீரணம் ஆயிற்று என்று அறிந்தே தின்னவேண்டும். ஏப்பம் வரும்போது சீரணம் ஆனதும் ஆகாததும் தெரியும். தின்பண்டங்களைக் கையால் எடுத்து வாயில் போடும்போதே வயிறு வேண்டாம் என்று தடுக்கும்.

கட்டும் துணிகள் கந்தைகளாய் இருந்தாலும் நன்றாய்க் கசக்கிக் கட்டவேண்டும். காலை வேளைகளில் தண்ணீரில் ஊறவைத்துக் கசக்கி வெய்யிலில் உலர்த்திக் கட்டும் துணியே சிறந்தது. தனக்கு வேண்டிய வேலை களை எப்பொழுதும் தானே செய்துகொள்வது நல்லது.

திங்களுக்கு ஒரு முறை அல்லது இருமுறை வயிற்றுக்குக் கொஞ்சம் ஓய்வு கொடுக்கவேண்டும். வயிற்றில் உள்ள மாசுகள் எல்லாம் கழிபடத் தக்க வழிகள் செய்ய வேண்டும். கனிவர்க்கங்களை அடிக்கடி வாங்கித் தின்பதால் வயிற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளலாம்.

அந்திவேளையில் நல்ல காற்றுவீசும் வெளியிடங்களில் உலாவி வருதல் நல்லது. பகலில் பழகும் இடங்கள் எல்லாம் நல்ல காற்றோட்டமுள்ள இடங்களாய் இருத்தல் வேண்டும். இரவில் துயிலும் இடமும் கொசு, மூட்டைப்பூச்சி முதலியவற்றின் துன்பம் இல்லாமல், நல்ல காற்றோட்டம் உள்ளதாக இருக்கவேண்டும். இரவில் அதிக நேரம் விழித்திருந்தால், வியாதிகள் தாமே வரும். குடியிருக்கும் இல்லம் குப்பை கூளங்களால் நாறிச் சாக்கடைத் தண்ணீர் பெருகியோடும் இடத்தில் இருக்கக்கூடாது. இந்தச் சௌகரியங்கள் எல்லாம் இருந்தால், மனிதன் நோயில்லாமல் வாழலாம். காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி முதலிய நோய்கள் வந்தவுடனே மருந்து தேடாமல், கொஞ்சம் பட்டினியிருந்து பார்த்துக் குணமாகாவிட்டால், பிறகு

வைத்தியரைத் தேடலாம். மருத்துவரை அடிக்கடி நாடாமல் இருந்தால் நோய்களும் மறையும்.

அந்தி	கழிபட	வயிற்றுவலி	எழுதுவதன் முன்
பட்டினி	மாசுகள்	காய்ச்சல்	குணமாய்விடும்
துயிலும்	தடுக்கும்	இடைவேளை	பலகாரங்கள்
தலைவலி	அனுகாது	கோதுமை	காற்றோட்டம்
திங்கள்	சிற்றுண்டி	தனவந்தன்	கையாடுவதற்கு
ஞாயிறு	நாடாமல்	ஒழுகுபவன்	கனிவர்க்கங்கள்
இல்லம்	மருத்துவர்	பழகப் பழக	உலக வாழ்க்கை
ஏப்பம்	வைத்தியர்	மூட்டைப்பூச்சி	ஒத்துக்கொள்ளும்

அரும்பதவுரை: தனவந்தன்-பணக்காரன். ஒழுகுபவன்-நடப்பவன். மருத்துவர்-வைத்தியர். கனிவர்க்கம்-பழவகை. அந்தி-சாயங்காலம். இல்லம்-வீடு. துயிலும்-தூங்கும்.

பயிற்சி

I. (1) பின்வரும் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் எந்த வகையைச் சேர்ந்தது?

தண்ணீர், பசி, வயிறு, ஆணி, வேளை, மலை, வருதல், வேலை, துன்பம், பணம், ஞாயிறு.

(2) பின்வரும் வினைச்சொற்களில் எவை எவை வினைமுற்றுக்கள்? எவை எவை எச்சங்கள்?

உண்டு, இல்லை, செய்ய, நேர்ந்தால், குளிரும், குளிர்ந்த, எடு, எடுத்து, அறிந்தான், ஆகாது.

II. (1) இன்பம் இல்லை, குணமாய்விடும், குறைவற்ற செல்வம், கசக்கிக் கட்டு, நோய்கள் மறையும் என்று முடியும்படியாக ஒவ்வொரு வாக்கியம் கூறு.

(2) சிறு + உண்டி = சிற்றுண்டி. - இம்மாதிரி வேறு மூன்று உதாரணங்கள் கூறு.

(3) பழகப் பழக—இம்மாதிரி வேறு மூன்று இரட்டைச் சொற்கள் கூறு.

கேள்விகள்

1. நோயற்ற வாழ்வுக்கு உள்ள பெருமை என்ன ?
2. நோயில்லாமல் வாழ்வதற்கு உரிய இயற்கை விதிகள் யாவை ?
3. உணவு விஷயமாக நாம் கவனிக்க வேண்டிய விதிகள் எவை ?
4. வயிற்றுக்கு ஓய்வு கொடுப்பது எப்படி ?
5. குளிப்பதிலும், உறங்குவதிலும் நாம் கவனிக்க வேண்டிய விதிகள் யாவை ?

அதிவீர ராம பாண்டியன்

அருளிச்செய்த

28. வெற்றிவேற்கை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
8. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
9. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
11. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
12. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
13. பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்.
14. சிறியோ ரெல்லாம் சிறியரும் அல்லர்.
15. பெற்றோ ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்.

16. உற்றோ ரெல்லாம் உறவினர் அல்லர்.
17. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
18. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
19. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
20. புகைக்கினும் காழ்அகில் பொல்லாங்கு கமழாது.
21. கலக்கினும் தண்கடல் சேறா காது.
22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
24. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.
25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.
27. கற்கை நன்றே; கற்கை நன்றே;
பிச்சை புகினும் கற்கை நன்றே.
28. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
29. நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழிருப் பவனே.
30. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்.
31. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.
32. யானைக் கில்லை தானமும் தருமமும்.

33. பூனைக் கில்லை தவமும் தயையும்.
34. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
35. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
36. முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
37. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
38. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
39. கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை.
40. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
41. குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
42. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
43. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
44. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
45. எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.
46. மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்துதம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
47. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
48. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.

49. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

50. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

51. கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.

52. சான்ருேர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

53. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே.

54. முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ்செய்து
அதன்பயன் உண்ணு வணிகரும் பதரே.

55. வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

56. தன் ஆயுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கைக் கொடுக்கும் பேதையும் பதரே.

57. வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

58. பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

59. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

60. இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே.

61. பழியா வருவது மொழியா தொழிவது.

62. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

63. புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்.

64. வழியே ஏகுக; வழியே மீளுக.

ஆ	தேயம்	குஞ்சரம்	நண்ணினும்
இரு	தோல்	நாணமும்	செழுங்கிளை
புணை	கூந்தல்	சிதலைக்கு	தாங்குதல்
குடி	கேளும்	தயையும்	தந்திரிக்கு
தேர்	நிலையும்	தானமும்	விரிப்பினும்
அணி	நீத்தும்	குலநலம்	உடமையும்
காழ்	தவமும்	தான்தர	சிறுமையும்
பாழ்	கற்கை	கமழாது	புகைக்கினும்
புனல்	அடினும்	தேம்படு	இர்வதோர்
மறுகி	கயத்து	செம்மை	தேவர்மூவர்
தழீஇ	தறுகண்	நாற்பால்	கொழுநரை
கசடு	நிதியை	நாற்றம்	கோடியாக
திரள்	அண்ணல்	இறைவன்	பறையாகவும்
புரவி	சிறுகண்	கேண்மின்	மெய்போலும்
அகில்	ஆண்மை	பொருந்த	அடிப்பு ஆகவும்
உக்கு	அலைத்து	பொற்றொடி	உரையாராயின்
மீளுக	சினையினும்	பெற்றமும்	நலிந்தோர்க்கு
மாடம்	மணஅணி	மைந்தரும்	பொல்லாங்கு
எழுநிலை	நெடுவழி	பேதையும்	அறக்கூழ்ச்சாலை
ஏகேல்	ஏழையும்	செறிந்து	வேர்க்கொள்ளாது
வழிவழி	சாற்றுவது	எய்த்து	சொல்லமாட்டாமை

அரும்பதவுரை: கசடு - குற்றம், பிழை. செழுங்கிளை - நெருங்கிய சுற்றத்தார்கள். இறைவன்-கடவுள். தந்திரிக்கு-சேனைத் தலைவனுக்கு. தறுகண் - அஞ்சாமை, தைரியம். ஆண்மை - ஆளுந்தன்மை. செம்மை - ஒழுக்கம் கெடாமல் இருப்பதாகும். தேம்படு - இனிமை பொருந்திய. திரள் - திரண்ட, உருண்டையான. கயத்து - குளத்திலுள்ள. சினையினும்-முட்டையைவிட. அண்ணல் - பெருமை பொருந்திய. புரவி-குதிரை. காழ்-வயிரம். நாணமும் - வெட்கமும். நலிந்தோர்க்கு - நோயாளிகளுக்கு, வறுமையுற்றவர்களுக்கு. குஞ்சரம்-யானை. நிதியை-செல்வத்தை. உக்கு - நொறுங்கி. தான்தர - தானே தனக்குத் தந்துகொள்ள. பெற்றமும் - மாடுகளும். பொற்றொடி - பொன்னினால் செய்யப்பட்ட நகைகளை யணிந்தவள் (பொன் + தொடி = பொற்றொடி). எய்த்து - தளர்ச்சியடைந்து. மறுகி - கலக்கமுற்று. ஈர்வதோர் - அறுப்பதாகிய ஒரு. (ஈர்வது + ஓர் = ஈர்வதோர்). புணை - தெப்பம். புனல் - நீர். ஏகேல் - போகாதே.

The B. N. Press, Educational Printers, Mount Road, Madras.